பக்கங்கள்: பத்து

Registered as a Newspaper

# உதயன்

விலை ரூபா 6-00

சுடர்: 12 வள்ளுவர் ஆண்டு 2028 சித்திரை 30 செவ்வாய்க்கிழமை (13-05-1997) UTHAYAN - A Lively National Tamil Daily கதிர்: 166

# மொறவெவ பொலீஸ் நிலையம் நேற்று அதிகாலை தகர்ப்பு!

## 12 பொலிஸார், 3 ஊர்காவலர் மற்றும் 8 பொதுமக்கள் பலி!

கொழும்பு, மே 13

திருகோணமலை மாவட்டத்தில், திருகோணமலை - அநுராதபுரம் வீதியில், திருகோணமலை நகரிலிருந்து சுமார் பன்னிரண்டு மைல் தொலைவில் உள்ள மொறவெவ பொலீஸ் நிலையம் நேற்று அதிகாலை விடுதலைப் புலிகளால் தாக்கி அழிக்கப்பட்டது.

இந்தப் பொலீஸ் நிலையம், அருகிலிருந்த விமானப் படையினரின் பன்குளம் தளம் மற்றும் இராணுவக் காவலரண்கள் ஆகியவற்றின் மீது ஏக காலத்தில் புலிகள் நடத்திய அதிரடித் தாக்குதலில் 12 பொலிஸார், மூன்று ஊர்காவலர்கள், எட்டுப் பொதுமக்கள் கொல்லப்பட்டனர்; மூன்று விமானப் படையினர், 13 பொலிஸார் உட்பட 26 பேர் காயமடைந்தனர்.

பெண் போராளிகள் உட்பட சுமார் நானூறு முதல் ஐந்நூறு பேரைக் கொண்ட விடுதலைப் புலிகளின் அணியே நேற்று அதிகாலை 1.30 மணியளவில் இந்த அதிரடிப் பாய்ச்சலை நடத்தியுள்ளது.

இத் தாக்குதலின் போது பொலீஸ் நிலையப் பகுதி புலிகளின் முழுக் கட்டுப்பாட்டில் வந்துள்ளது. இதனை அடுத்து பொலீஸ் நிலையக் கட்டடம், பொலீஸ் பொறுப்பதிகாரியின் விடுதி உட்பட பொலீஸாரின் விடுதிகள், அருகிலிருந்த உப தபால் நிலையம், தொலைத் தொடர்புக் கோபுரம், பொலீஸ் நிலையத்தில் நிறுத்தப்பட்டிருந்த ஜீப்,

(10 ஆம் பக்கம் பார்க்க)

## சாள்ஸ் அன்ரனி படைப்பிரிவின் தாக்குதல்

கொழும்பு, மே 13

விடுதலைப் புலிகளின் 'சாள்ஸ் அன்ரனி' படைப் பிரிவைச் சேர்ந்த போராளிகள் அணியே மொறவெவ பொலீஸ் நிலையம் மீதுதாக்குதல் நடத்தியிருக்கின்றது.

இந்தப் படைப் பிரிவின்— குப்புறுப்பிட்டியில் இருந்து

(10ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் 8 சடலங்கள் படையினர் மீட்டனர்

கொழும்பு, மே 13

மொறவெவ பொலீஸ் நிலையம் மீது நடத்தப்பட்ட தாக்குதலின் போது உயிரிழந்ததாகக் கருதப்படும் எட்டு விடுதலைப்புலிகளின் சடலங்களை தாங்கள் கைப்பற்றியிருப்பதாக அரச தரப்புச் செய்திகள் தெரிவித்தன.

எனினும் இத்தாக்குதலில் தமது தரப்புக்கு ஏற்பட்ட சேத விவரம் பற்றிய தகவல் எதனையும் 'புலிகளின் குரல்' வானொலி நேற்றிரவு வரை வெளியிடவில்லை.

தாக்குதலுக்கு இலக்கான பொலீஸ் நிலையக் கட்டடப் பகுதியில் விடுதலைப் புலிகள் எனக் கருதப்படும் இருவரின் சடலங்களையும்—

தாக்குதலுக்கு இலக்கான பிரதேசத்துக்கு அருகில் உள்ள நாமல்வத்தை காட்டுப் பகுதியில் விடுதலைப் புலிகளினுடையவை எனக் கருதப்படும் மற்றும் ஆறு சடலங்களையும் —

தாங்கள் கைப்பற்றியதாக அரசுத் தரப்புச் செய்திகள் நேற்றிரவு தெரிவித்தன.

சண்டையில் காயமடைந்த தமது போராளிகளை அல்லது அவர்களின் சடலங்களை புலிகள் தூக்கி வந்து இக்காட்டுப் பகுதியில் கைவிட்டிருக்கலாம் என்றும் —

காயமுற்ற போராளிகள் பின்னர் கைவிடப்பட்ட நிலையில் உயிரிழந்திருக்கலாம் என்றும் —

அரசவட்டாரங்கள் கருத்து வெளியிட்டன. (உ-21)

## பெருமளவு ஆயுதங்கள் புலிகள் வசம்

மொறவெவ பொலீஸ் நிலையம் மீதான தாக்குதலின்போது அங்கிருந்த பெருமளவு ஆயுதங்களையும் புலிகள் அள்ளிச் சென்றிருப்பதாகக் கருதப்படுகின்றது

பொலீஸ் நிலையத்திலிருந்த — ஆயுதப் பதிவேட்டு

(10 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டு. நகர் மீது பாரிய தாக்குதல் நடத்தத்திட்டம்

கொழும்பு, மே 13

மட்டக்களப்பு நகர் மீது பாரிய தாக்குதல் ஒன்றை நடத்துவதற்காக விடுதலைப் புலிகள் தொப்பிக் கலக் காட்டுப் பகுதியில் திரள்வதாகத் தகவல் கிடைத்துள்ளதாக படைவட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்தத் தகவலையடுத்து கடந்த வெள்ளிக்கிழமை தொப்பிக்கல காட்டுப் பகுதியில் 'கிபிர்' ஜெட் விமானங்கள் தாக்குதல் நடத்தின என்றும் —


அதனால் ஏற்பட்ட சேத விவரம் தெரியவரவில்லை என்றும் — தெரிவிக்கப்பட்டது. (ஐ-3-150)

## வவுனியாவில் ஆர்ப்பாட்டம் நடத்த முயற்சி

வவுனியா, மே 13

வவுனியாவில் இராணுவத்தினரைத் தங்க வைப்பதற்கு மூன்று முக்கிய பாடசாலைகள் கையேற்கப்பட்டமை குறித்து இப் பிரதேச மக்கள் அதிருப்தியடைந்துள்ளதாகத் தெரிய வருகிறது.

(10 ஆம் பக்கம் பார்க்க)



காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம், அன்னையர் முன்னணி அங்கத்தவர்கள் நேற்று யாழ். செயலகத்தில் மேலதிக அரசாங்க அதிபர் க. சண்முகநாதனைச் சந்தித்துத் தமது முறைப்பாடுகளைத் தெரிவித்தனர். அங்கு நடந்த கலந்துரையாடலில் கைதானோர், காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கத்தின் தலைவர் வி செல்வராசா உரையாற்றுவதைப் படத்தில் காணலாம். (ஐ-3)

### ஒரு வாரத்தினுள் உரிய தகவல்களைப் பெற்றுத் தராவிட்டால்

# காணாமற்போனோரின் உறவினர் சாகும்வரை உண்ணாவிரத முஸ்தீபு

"யாழ். மாவட்டத்தில் பல்வேறு சந்தர்ப்பங்களில் கைது செய்யப்பட்ட பின்னர் காணாமற்போனோர் தொடர்பான தகவல்களை ஒரு வார காலத்துக்குள் பெற்றுத் தர வேண்டும். இல்லையேல் யாழ். செயலகம் முன்பாக சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டம் ஒன்றை ஆரம்பிப்போம்."

- காணாமற் போனோர் பாதுகாவலர் சங்கம் மற்றும் அன்னையர் முன்னணியைச் சேர்ந்தோர் இவ்வாறு காலக்கெடு விதித்து எச்சரிக்கை விடுத்திருக்கின்றார்கள்.

(10 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



''எங்கள் பிள்ளைகள், கணவர்கள், சகோதரர்களுக்கு என்ன நடந்தது? அவர்களை நாம் பார்க்க முடியாதா? தொடர்பு கொண்டு சுகநலம் அறிய முடியாதா?'' — என்று கேட்டு பெண்கள் கூக்குரல் வைத்து அழும் காட்சிகள் இவை.

காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கம், அன்னையர் முன்னணி அங்கத்தவர்கள் யாழ். செயலகத்தில் மேலதிக அரசாங்க அதிபர் க. சண்முகநாதனைச் சந்தித்துத் தமது முறைப்பாடுகளைத் தெரிவித்த போது இந்தச் சோகக் காட்சிகளைக் காணமுடிந்தது.

# இந்தியப் படகு தாக்கப்பட்ட தகவல் மாலைதீவுக்கு அறிவிக்கப்பட்டது

## சந்திரிகா - குஜ்ரால் பேச்சில் பிரஸ்தாபிக்கப்படும்

கொழும்பு, மே 13

மன்னார்க் கடற் பகுதியில் கடந்த ஞாயிறன்று இந்திய மீன்பிடிப் படகு மீது இலங்கைக் கடற்படையினர் நடத்திய தாக்குதல் சம்பவம் குறித்து தற்போது மாலைதீவில் தங்கியுள்ள இந்திய-இலங்கை அதிகாரிகளுக்கு அறிவிக்கப்பட்டுள்ளதாகக் கொழும்பு செய்தி வட்டாரங்கள் தெரிவித்தன.

மன்னார்க் கடற் பகுதியில் காணப்பட்ட இழுவைப்படகு ஒன்றை இலங்கைக் கடற்படையினர் இடை மறித்த போது, உத்தரவை மீறிச் சென்ற அந்தப் படகு மீது தாக்குதல் நடத்தப்பட்டதாகவும்—

அச்சமயம் அந்தப் படகு தீப் பிளம்பாக வெடித்துச் சிதறியதாகவும் தெரிவிக்கப்பட்டது.

அதே வேளை — இந்த இழுவைப்படகுடன் சென்ற மற்றொரு சிறிய படகு தப்பி ஓடிவிட்டது என்றும்—

அப்படகில் தமிழ் அகதிகள் இருந்திருக்கக் கூடும் என நம்பப்படுவதாகவும் — அரசாங்க வட்டாரங்கள் தெரிவித்தன.

''சார்க்'' மாநாட்டில்பங்குபற்றுவதற்காக மாலை தீவு சென்றுள்ள இந்தியப் பிரதமர் இந்தர்குமார் குஜ்ராலும், இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்காவும் இரு தரப்பு விவகாரங்கள் குறித்து நாளை பேச்சு நடத்தவிருக்கும் சந்தர்ப்பத்தில் இத் தாக்குதல் இடம் பெற்றுள்ளதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. (ஐ-3)

## மரண அறிவித்தல்கள்

### தில்லைநாதர் பொன்னுத்துரை

(இளைப்பாறிய ஓவசியர்)

தில்லைநாதர் பொன்னுத்துரை (இளைப்பாறிய ஓவசியர்) அவர்கள் 11 - 05 - 97 அன்று கைதடியில் உள்ள அவரது இல்லத்தில் இறைபதமெய்திவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற தில்லைநாதர் தங்கம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்ற தங்கம்மாவின் அன்புக் கணவரும், திரு குமாரசுவாமி (G. O. B. A. - Colombo, நியூசிலாந்து), அமரர் ரட்ணராஜா, திருமதி சறோஜினிதேவி வீரசிங்கம் ஆகியோரின் பாசமிகு தந்தையும், திரு. கைலாயபிள்ளை வீரசிங்கம் (மாவட்ட மருந்தாளர், யாழ். சுகாதாரத் திணைக்களம்), டாக்டர் திருமதி லோகேஸ்வரி குமாரசாமி (நியூசிலாந்து) ஆகியோரின் அன்பு மாமனாரும், மயூரன் (கொழும்பு மருத்துவ பீட இறுதியாண்டு மாணவன்), தயாளன் (யாழ். மருத்துவபீட இரண்டாம் வருட மாணவன்), பார்த்தீபன் (யாழ். பரியோவான் கல்லூரி, ஆண்டு 11 மாணவன்), வசுமதி (நியூசிலாந்து ஒக்லண்ட் பல்கலைக்கழக விஞ்ஞானபீட மாணவி), பிரதீபன் (மாணவன், நியூசிலாந்து) ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் கைதடியிலுள்ள அவரது இல்லத்தில் 13 - 05 - 97 இன்று செவ்வாய்க்கிழமை காலை 11 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக ஊற்றல் மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
கை. வீரசிங்கம்
(மருமகன்)

''லக்ஷ்மி வாசா'',
கைதடி தெற்கு,
கைதடி.

(46899)

### கணபதிப்பிள்ளை ஜெகநாதன் (பாபு)

1ஆம் கட்டை புலோலி கிழக்கு, பருத்தித்துறையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்டு தற்சமயம் பிரான்ஸில் வசித்தவருமாகிய கணபதிப்பிள்ளை ஜெகநாதன் (பாபு) 05-04-1997 இல் பிரான்ஸில் அகாலமரணமானார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் (13-05-1997) 9 மணியளவில் பிரான்ஸில் நடைபெறும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
மா. பிரேமனா
(சகோதரி)

1ஆம் கட்டை,
புலோலி கிழக்கு,
பருத்தித்துறை.

(46900)

## இன்று கப்பல் சேவை

யாழ்ப்பாணம், மே 13

காங்கேசன்துறையிலிருந்து திருகோணமலைக்கு இன்று 500 பயணிகளுடன் கப்பல் சேவை நடைபெறவிருப்பதாக யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

இன்று கப்பலில் செல்லப் பதிவு செய்தவர்களை இன்று காலை 7.00 மணிக்கு யாழ். ரயில் நிலையத்துக்கு வருமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ-3)

## மிதிவெடியில் சிக்கிய மாடு

யாழ்ப்பாணம், மே 13

மந்திகையில் இராணுவக் காவலரண் பகுதியில் மேய்ந்து கொண்டிருந்த மாடு ஒன்று நேற்று முன்தினம் மிதிவெடியில் சிக்கியதில் அதன் ஒரு கால் துண்டிக்கப்பட்டது. (ஐ-15)

சுப்ப ஸோ
வீடியோவின்
இன்றைய வெளியீடு
கார்த்திக், ரோஷினி
நடித்த
சிஷ்யா
100 A, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
(சி/716)

எமது இன்றைய
புதிய வெளியீடு
கார்த்திக் நடித்த
சிஷ்யா
வீடியோ விமல்
யாழ்ப்பாணம்.
(46901)

யாழ். ஆஸ்பத்திரியில்

## மூன்று சடலங்கள் ஒப்படைக்கப்பட்டன

யாழ்ப்பாணம், மே 13

நேற்று முன்தினம் வெவ்வேறு இடங்களில் உயிரிழந்ததாகக் கருதப்படும் மூவரின் சடலங்கள் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

அது பற்றிய விவரம் வருமாறு:-

கொழும்புத்துறை இராணுவத்தினரால் கையளிக்கப்பட்டதாகக் கூறப்படும் — இனந்தெரியாத — இளைஞர் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் மாலை யாழ்ப்பாணம் பொலீஸாரால் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

இந்த இளைஞர் சயனைட் அருந்தி உயிரிழந்ததாகக் கூறப்படுகின்றது.

சண்டிலிப்பாயில் நேற்று முன்தினம் இடம் பெற்றதாகக் கூறப்படும்—இராணுவத்தினரின் — துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் ஒன்றில் இனந்தெரியாத ஒருவர் உயிரிழந்தார்.

சுமார் 25 வயது மதிக்கத்தக்க இந்த இளைஞனின் சடலம் இளவாலைப் பொலீஸாரால் யாழ். ஆஸ்பத்திரியில் ஒப்படைக்கப்பட்டது.

சடலத்தின் நெற்றிப் பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக் காயம் காணப்பட்டது.

இந்த இரு சடலங்களும் இனம் காணும் பொருட்டு ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளன.

யாழ்ப்பாணம் பெருமாள் கோயிலடிப் பகுதியில் வீதியோரத்தில் அநாதரவாகக் கிடந்ததாகக் கூறப்படும் ஒருவரின் சடலம் நேற்று முன்தினம் மாலையில் யாழ். ஆஸ்பத்திரியில் ஈ. பி. டி. பி. உறுப்பினரால் ஒப்படைக்கப்பட்டது.

அனலைதீவைச் சேர்ந்த சுப்பிரமணியம் செல்வரட்ணம் (வயது 58) என்பவரே உயிரிழந்தவராவார்.

இவரின் பின்பக்கத் தலையில் காயம் காணப்பட்டது.

இச்சடலம் விசாரணையின் பொருட்டு ஆஸ்பத்திரி பிரேத அறையில் வைக்கப்பட்டது. (உ-15)

## மஹோற்சவம்

யாழ்ப்பாணம், மே 13

வண்ணை வடமேற்கு அண்ணாமார் களனிப்பதி ஸ்ரீ விஸ்வலிங்க மகா கணபதி மூர்த்தி கோயில் வருடாந்த மஹோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை முற்பகல் 11 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 10 நாள்கள் நடைபெறும். எதிர்வரும் 21ஆம் திகதி காலை 9.30 மணிக்கு தேர்த் திருவிழாவும், மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (ஐ)

★ ★ ★

உரும்பிராய் பர்வதவர்த்தினி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் இன்று கொடியேற்றத்துடன் ஆரம்பமாகித் தொடர்ந்து 11 நாள்கள் நடைபெறும். (ஐ-15-30)

★ ★ ★

அனலைதீவு ஸ்ரீ எழுமங்கை நாச்சிமார் மனோன்மணி அம்பாள் தேவஸ்தானத்தின் வருடாந்த மஹோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 21 ஆம் திகதி தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தத் திருவிழாவும் நடைபெறும். இதற்கென விசேட படகுச் சேவை மற்றும் பஸ் சேவை என்பன ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. யாழ். பஸ்தரிப்பு நிலையத்தில் இருந்து தினமும் காலை 7.15 மணிக்கும் 9.15 மணிக்கும் 11.45 மணிக்கும் பிற்பகல் 1.30 மணிக்கும் ஊர்காவற்றுறை பஸ் புறப்படும். (ஐ-4)

## அளவெட்டி தேவாலயத்தில் மீண்டும் வழிபாடு

யாழ்ப்பாணம், மே 13

அளவெட்டி புனித சூசையப்பர் தேவாலயம் மக்கள் வழிபாட்டுக்காக திறக்கப்பட்டுள்ளது.

இத் தேவாலயத்தில் வழிபாடு செய்ய அனுமதியளிக்கப்பட்டதை அடுத்து அங்கு திருத்த வேலைகள் இடம்பெற்றன. திருப்பலியும் நிறைவேற்றப்பட்டது. (ஐ-15)

## கூட்டுறவு பயிற்சி வகுப்பு

தென்மராட்சி, மே 13

யாழ். மாவட்ட ஒன்றிணைந்த கூட்டுறவுக் கல்வி அபிவிருத்தித் திட்டத்தின் பச்சிலைப்பள்ளி பலநோக்குக் கூட்டுறவுச் சங்க நெறியாளர் குழு, உபகுழு, கிளைக்குழு ஆகியவற்றின் உறுப்பினர்களுக்கான பயிற்சி வகுப்பு நாளை புதன்கிழமை காலை 9.30 மணிக்கு பளை ப.நோ.கூ. சங்க கூட்டுறவு மண்டபத்தில் சங்கத் தலைவர் சி. சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறும்.

இந்தப் பயிற்சி நெறியில் ''கிளைக்குழுக் கடமைகள், பொறுப்புக்கள்'' என்னும் தலைப்பில் யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபை கல்வி பயிற்சியளிப்பு அலுவலர் வீ.கே. சிவராசசுந்தரமும் ''சங்க அபிவிருத்தியில் கிளைக்குழுவின் பங்கு'' என்னும் தலைப்பில் கூட்டுறவுச் சபை மாவட்டச் செயலாளர் சு.சிவசுப்பிரமணியமும் உரையாற்றுவார்கள். (இ-117)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 6 ஆயிரம் படையினர் ஈரானில் மீட்புப் பணி

## கிராமங்கள் எங்கும் அழுகுரல்

தெஹ்ரான், மே 13

கடந்த சனிக்கிழமை கிழக்கு ஈரானில் இடம்பெற்ற பூமியதிர்ச்சி காரணமாக பெரும் அளவில் வீடுகள் கட்டடங்கள், மசூதிகள் தரைமட்டமாகி உள்ளன. இடிபாடுகளிடையே சிக்கி உள்ளவர்களை மீட்கும் பணியில் 6 ஆயிரம் படையினரை ஈரான் அரசு ஈடுபடுத்தி உள்ளது.

கிராமங்கள் எங்கும் அழுகுரல்கள் கேட்பதாகவும் உயிர் தப்பியவர்கள் காணாமற்போன தமது உறவினர்களைத் தேடுவதாகவும் செய்திகள் தெரிவிக்கின்றன.

மீட்புப் பணிகள் துரிதமாக நடைபெறுகின்றன. காயமுற்றவர்கள் மருத்துவ மனைகளுக்கு எடுத்துச் செல்லப்பட்டு சிகிச்சை அளிக்கப்படுகிறது,

பூமியதிர்ச்சிஇடம்பெற்றவுடன் ஈரான் சர்வதேச நாடுகளின் உதவியைக் கோரியது. இக் கோரிக்கையை அடுத்து பல நாடுகள் நிவாரண உதவிகளை வழங்க முன்வந்துள்ளன.

இந்திய டாக்டர்கள் உடனடியாக ஈரான் சென்று காயமடைந்தவர்களுக்கு சிகிச்சை அளித்து வருவதாக பாதிக்கப்பட்ட இடத்திலிருந்து பி பி ஸி செய்தியாளர் தெரிவிக்கிறார்.

சவூதி அரேபியா, எகிப்து போன்ற நாடுகள் ஈரானுடன் நல்லுறவுகளைக் கொண்டிராத போதிலும் ஈரானின் வேண்டுகோளுக்கு இணங்கி நிவாரண உதவிகளை வழங்க முன்வந்துள்ளன, சவூதி அரேபியா ஏற்கனவே இருவிமானங்களில் நிவாரணப் பொருள்களை அனுப்பி வைத்துள்ளது. (இ-10)

# சாந்தி பாஹினியுடன் 4 ஆம் கட்டப்பேச்சுகள்

## டாக்காவில் நடைபெற்றன

டாக்கா, மே 13

பங்களாதேஷில் கடந்த இரண்டு தசாப்தங்களாக நடைபெற்றுவரும் கிளர்ச்சியை முடிவுக்குக் கொண்டு வருவதற்கான நான்காவது சுற்று சமாதானப் பேச்சுகள் நேற்று முன்தினம் டாக்காவில் ஆரம்பமாகின.

பங்களாதேஷின் தென்பகுதி மலைப் பிரதேசங்களில் கிளர்ச்சியில் ஈடுபட்டு வரும் டழங்குடிகளான சாந்தி பாஹினி தலைவர்களும் அரச பிரதிநிதிகளும் இந்தப் பேச்சில் கலந்து கொண்டனர்.

பேச்சுக்கள் சினேக முறையில் இடம் பெற்றதாகவும் நேற்று அவை மீண்டும் தொடர இருந்ததாகவும் அறிவிக்கப்பட்டிருந்தது. (இ)

# தாய்மார் தினத்தில் தாய்வானில் பேரணி

கடந்த ஞாயிறன்று உலகெங்கும் ஆர்வத்துடன் கொண்டாடப்பட்ட ''தாய்மார்கள் தினம்'' தாய்வான் தாய்மாரைப் பொறுத்தவரை ஓர் அரசியல் எதிர்ப்புப் பேரணியாக மாறியது.

ஏப்ரல் மாதம் 28 ஆம் திகதியன்று மர்மமான முறையில் கொலை செய்யப்பட்டு சாக்கடையில் எறியப்பட்டிருந்த நடிகை தாய் என்பவரின் 17 வயது மகளின் அடக்கச் சடங்கும் தாய்மார்கள் தினத்தன்றே நடத்தப்பட்டது.

பெருகி வரும் சமூக குற்றங்களுக்கு எதிராக தாய்மார்கள் கோஷமெழுப்பினர்.

# குஜ்ரால் - நவாஸ்ஷெரீப் மாலேயில் முக்கிய சந்திப்பு

## இந்திய-பாக்.உறவில் புதிய திருப்பம் ஏற்படலாம்

புதுடில்லி, மே 13

9 ஆவது சார்க் மாநாட்டில் கலந்து கொள்வதற்காக மாலைதீவின் தலைநகரான மாலே சென்றுள்ள இந்தியப் பிரதமர் இந்தர்குமார் குஜ்ராலும் பாகிஸ்தான் பிரதமர் நவாஸ் ஷெரீப்பும் நேற்று முக்கிய பேச்சுக்களை நடத்த இருந்தனர்.

பிரதமராகப் பதவி ஏற்ற பின்னர் குஜ்ரால் வெளிநாடு சென்றிருப்பது இதுவே முதல் தடவை ஆகும்

குஜ்ராலுக்கும் நவாஸ் ஷெரீப்புக்கும் இடையிலான பேச்சுக்கள் இந்திய — பாக். உறவில் புதிய திருப்பத்தை ஏற்படுத்தலாம் என்றும் —

கடந்த காலங்களில் இரு நாடுகளுக்கும் இடையில் நிலவி வந்த கசப்பான உறவுகள் நீங்க வழிவகுக்கும் என்றும் அவதானிகள் கருத்துத் தெரிவித்தனர்.

சுதந்திரம் அடைந்த நாள் முதல் இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான உறவுகள் சீரடையாததுக்கு காஷ்மீர் பிரச்சினையே முக்கிய காரணமாக இருந்தது.

காஷ்மீருக்கான 1947 ஆம் ஆண்டும் 1965 ஆம் ஆண்டும் இந்தியாவும் பாகிஸ்தானும் போரிட்டுள்ளன.

காஷ்மீர் பிரச்சினை குறித்த சமாதானப் பேச்சுக்கே இடமில்லை என்றும் —

காஷ்மீரில் தேர்தல் நடத்தப்பட்டு சட்டபூர்வமான அரசாங்கம் தற்பொழுது பதவியில் இருப்பதாகவும் இந்தியா சமீப காலமாக வலியுறுத்தி வந்தது.

எனினும் மாலேயில் நடக்கும் சந்திப்பு இந்தப் பிரச்சினையில் திருப்பங்களை ஏற்படுத்தலாம் என்று நம்பப்படுகிறது. (இ)

# ஜெரூஸலத்தின் நகராட்சியை விஸ்தரிக்கதிட்டம்

சர்ச்சைக்குரிய அரபுநாட்டுப் பகுதியாகிய மேற்குக் கரை வரை ஜெரூஸலம் நகராட்சியை விஸ்தரித்து பெரியதொரு ஜெரூஸலத்தை உருவாக்கும் இஸ்ரேலின் திட்டம் ஏற்கனவே முடங்கிப் போயிருக்கும் மத்திய கிழக்கு அமைதிப் பேச்சுவார்த்தைகளில் மீண்டும் பிரச்சினைகளைத் தோற்றுவித்துள்ளது.

பேச்சுவார்த்தை மேசைக்கு இரு தரப்பையும் அழைத்து வரச் சிரமப்பட்டுக் கொண்டிருக்கும் அமெரிக்கா இஸ்ரேலின் இத்திட்டம் குறித்து ஏமாற்றம் தெரிவித்துள்ளது.

# அனைத்துக் கட்சி மாநாடு

சென்னை, மே 13

தமிழ் நாட்டின் தென் மாவட்டங்களில் இடம் பெற்ற சாதிக்கலவரங்கள் குறித்து தமிழக முதலமைச்சர் கருணாநிதி நாளை சென்னையில் அனைத்துக் கட்சிகள் மாநாடு ஒன்றைக் கூட்டுகிறார். (இ)

# 9 ஆவது சார்க் மாநாடு மாலேயில் நேற்று ஆரம்பம்

9 ஆவது சார்க் மாநாடு நேற்று மாலைதீவின் தலைநகர் மாலேயில் ஆரம்பமானது.

மாலைதீவின் ஜனாதிபதி முகமட் அப்துல் கையூம் மாநாட்டை ஆரம்பித்து வைத்தார்.

இந்தியப் பிரதமர் இந்தர் குமார் குஜ்ரால், பாகிஸ்தான் பிரதமர் நவாஸ்ஷெரீப் இலங்கை ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க, பங்களாதேஷ் பிரதமர் ஷேய்க் ஹசீனா, பூட்டான் மன்னர் வாங் சுங் கீ, நேபாள பிரதமர் லோகேந்திர பகதூர் சான், மாலைதீவு ஜனாதிபதி முகமட் அப்துல கையூம் ஆகியோர் இந்த மாநாட்டில் கலந்து கொள்கின்றனர்.

மாலைதீவின் தலைநகர் மாலேயில் மாநாடடில் கலந்து கொள்ளும் ஏழு நாடுகளினதும் கொடிகள் பறக்க விடப்பட்டு, கட்டடங்கள் யாவற்றிலும் தலைவர்களை வரவேற்கும் வாசகங்கள் காணப்படுகின்றன.

சிறுவர்களைப் பாதுகாப்பதற்கான உடன்படிக்கை ஒன்று செய்து கொள்ளப்படவேண்டும் என்று மாநாட்டை ஆரம்பித்து வைத்த மாலைதீவு ஜனாதிபதி தெரிவித்தார்.

இம்மாநாட்டில் பிராந்திய வர்த்தகம், சுற்றாடல் பிரச்சினைகள் ஆகியவை பற்றி கவனம் செலுத்தப்படும் என்று எதிர்பார்கப்படுகின்றது. (இ-5)

# தேர்தலைக் குழப்ப அல்ஜீரியாவில் முயற்சி

## தீவிரவாதிகள் துப்பாக்கிச் சூடு

அல்ஜியேர்ஸ் மே 13

அல்ஜீரியாவின் பொதுமக்கல் கூடும் இடங்களில் தீவிரவாதிகள் நான்கு தடவைகள் குண்டுத் தாக்குதல்களை நடத்தி உள்ளனர்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இத்தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

இந்தத் தாக்குதல்களில் 6 பேர் இறந்தனர் எனவும் 71 பேர் காயமடைந்தனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

அல்ஜீரியாவில் இன்னும் மூன்று நாள்களில் தேர்தல் நடைபெறவுள்ள இவ்வேளையில் இஸ்லாமிய தீவிரவாதிகள் தேர்தலைக் குழப்பும் நோக்கில் கலவரங்களை நடத்தி வருகின்றனர். (இ-10)

# உலக அரங்கில்

# தேர்தல் பிரசாரம் ஈரானில் ஆரம்பம்

தெஹிரான், மே 13

ஈரானில் நடைபெறவுள்ள அதிபர் தேர்தலுக்கான பிரசாரங்கள் ஆரம்பமாகியுள்ளன. இருநூறுக்கு மேற்பட்ட விண்ணப்பங்களில் இருந்து நால்வரை மட்டும் ஈரானின் இஸ்லாமியசபை இந்தத் தேர்தலுக்கு வேட்பாளர்களாகத் தெரிவு செய்துள்ளது.

இவர்களில் வெற்றியீட்டும் ஒருவர் தற்போதைய அதிபர் அக்பர்ரஸ்பஞ்சானியின் இடத்துக்கு வருவார்.

போட்டியிடவுள்ள இந்த நால்வரில் நாடாளுமன்ற அவைத் தலைவர் அலிஅக்பர் நௌரியே முன்னணியில் திகழ்வதாக கணிப்பிடப்பட்டுள்ளது. இவருக்குப் போட்டியாளராக முன்னாள் கலாசார அமைச்சர் முகமது ஹட்டானி உள்ளார்.

எந்தவொரு வேட்பாளருக்கு ஆதரவு தெரிவித்தாலும் பத்திரிகைகள் உடனடியாக மூடப்படும் என்று அரச செய்தித் தாள்களுக்கு எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

# முறைப்பாடு

இஸ்ரேலுக்கு விஜயம் செய்யும் அமெரிக்க அதிகாரிகளை இஸ்ரேல் உளவுத்துறையினர் தேவையின்றி துருவித் துருவி [illegible] ரேலில் உள்ள அமெரிக்கத் தூதுவர் முறைப்பாடு செய்துள்ளார். (இ-10)

# கணனியிடம் தோற்ற ரஷ்ய சதுரங்க வீரர்!

நியூயோர்க், மே 13

உலக சதுரங்கசம்பியனான ரஷ்யாவைச் சேர்ந்த ஹரி சஸ்பனோவுக்கும் மிகத்தொழில்நுட்பம் வாய்ந்த கணனி ஒன்றுக்கும் இடையில் நியூயோர்க்கில் நடந்த சதுரங்கப் போட்டியில் கணனி வென்று அனைவருக்கும் ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

கடந்த வருடம் பரீட்சார்த்தமாக கணனியுடன் இடம்பெற்ற சதுரங்கப் போட்டியில் ஹரி கஸ்பனோவ் இலகுவாக வெற்றி பெற்றிருந்தார்.

கஸ்பனோவின் இந்த வெற்றியை அடுத்து கணனியில் பல புதிய நுட்பங்கள் சேர்க்கப்பட்டன.

உலகின் மிகச்சிறந்த மனித மூளை இயந்திர மூளையிடம் தற்போது தோற்றுவிட்டது. (இ-10)

## பொருளாதார வளர்ச்சி கண்ட

# ஆசிய நாடுகளில் இந்தியா 4 ஆம் இடத்தைப் பிடிக்கும்

## அமைச்சர் சிதம்பரம் தெரிவிப்பு

பொருளாதார வளர்ச்சி பெற்ற ஆசிய நாடுகளில் இந்தியா நான்காவது இடத்தைப் பிடிக்கும்.

இந்திய மத்திய நிதி அமைச்சர் ப. சிதம்பரம், ஜப்பானில் இடம் பெற்ற ஆசிய அபிவிருத்தி வங்கியின் 30 ஆம் ஆண்டுக் கூட்டத்தில் பேசுகையில் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'30 ஆண்டுகளில் ஆசியா' என்ற தலைப்பில் அவர் உரை நிகழ்த்தினார்.

இந்தியாவில் சமீபத்தில் அரசுகள் அடிக்கடி மாறினாலும் பொருளாதாரச் சீர்திருத்தம் தாராளமயம் திட்டங்கள் ஒரு போதும் மாற்றப்பட்டதில்லை.

புதிய பொருளாதார சூழ்நிலைக்கு ஏற்ப இந்தியத் தொழிற்றுறை இதனை மாற்றிக்கொண்டுள்ளது.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## “அலேட்” அமைப்புக்கு

# புலிகள் தாராள நிதி உதவி

## குற்றம் சுமத்துகின்றார் ஐ. தே. கட்சியின் எம். பி.

கொழும்பு, மே 13

“குமார் ருபசிங்க தலைமையில் இயங்கும் ‘அலேட்’ அமைப்புக்கு விடுதலைப் புலிகளே நிதி உதவி வழங்குகிறார்கள். ஆகவே ‘அலேட்’ அமைப்பு ஏற்பாடு செய்யும் மாநாடுகளுக்கு ஐ. தே. கட்சியின் எம்பக்களை அனுப்பக் கூடாது.”

— இப்படி கோரிக்கை விடுத்தார் ஐ. தே. கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் திலக் கருணாரத்தின.

ஐ. தே. கவின் செயற்குழுக் கூட்டம் அதன் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தலைமையில் அண்மையில் நடைபெற்ற போதே அவர் இப்படிக் கூறினார்.

அவர் அங்கு மேலும் கூறியதாவது:-

“குமார் ருபசிங்க ‘ஒரு நாட்டில் இரு இனங்கள்’ என்ற கொள்கையில் நம்பிக்கை கொண்டவர். அவரின் தலைமையிலான ‘அலேட்’ அமைப்பு அயர்லாந்தில் ஒரு மாநாட்டை நடத்தியது. அந்த மாநாட்டில் கலந்து கொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், 3 ஆம் தரப்பு மத்தியஸ்தத்துடன் பேச்சு நடக்க வேண்டும் என்று கோரி கூட்டாக அறிக்கை விடுத்தனர்.

“பின்னர் அந்த அமைப்பு மணிலாவில் ஒரு மாநாடு நடத்தியது. அந்த மாநாட்டில் கலந்துகொண்ட நாடாளுமன்ற உறுப்பினர்கள், விடுதலைப் புலிகளுடன் உடன் பேச்சை ஆரம்பிக்க வேண்டும் என்று கூட்டாக அறிக்கை விடுத்தனர்.

“இந்த அமைப்பு புலிகளுக்கு ஆதரவானது என்பது இந்த மாநாடுகளின் முடிவில் வெளியிடப்படும் அறிக்கைகளில் இருந்து புலனாகிறது.

“ஆகவே இனி இந்த அமைப்பு ஏற்பாடு செய்யும் மாநாடுகளுக்கு ஐ. தே. கட்சியின் எம். பிக்களை அனுப்பக் கூடாது” — என்றார்.

இந்தப் பேச்சைக் கேட்டு ரணில் விக்கிரமசிங்க அமைதியாக இருக்கவே, மணிலாவில் நடந்த மாநாட்டில் கலந்து கொண்ட கருணசேன கொடித்துவக்கு பதிலளித்தார்

“அலேட் அமைப்புக்கும் விடுதலைப்புலிகளுக்கும் எந்த வித தொடர்பும் இல்லை. ஜப்பானில் உள்ள ‘சசக்காவ’ என்னும் அமைப்பே அலேட் அமைப்புக்கு நிதி உதவி வழங்கி வருகிறது” என்றார் கொடித்துவக்கு. (உ-3-150)

## புலிகளுடன் பேச்சு நடத்துவதற்கு

# மத்தியஸ்தர் தேவையில்லை; பேச்சுக்கு உதவுபவரே தேவை

### ரணில் கூறுகின்றார்

கொழும்பு, மே 13

“விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த மத்தியஸ்தர் தேவையில்லை. நாட்டுக்கு வெளியே விடுதலைப் புலிகளுடன் பேச்சு இடம்பெறுமாயின் அப்பேச்சுக்கு உதவி அளிக்கக் கூடியவரே இப்போது தேவை”

ஐ தே. கட்சித் தலைவரும எதிர்க்கட்சித் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சொழும்பில் இருந்து வெளிவரும் பத்திரிகை ஒன்றுக்கு அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

முன்பு எமது ஆட்சிக் காலத்தில் — திபுப் பேச்சுக்களின் போது — இந்தியா செயற்பட்டது போன்று விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்த உதவியளிக்கக் கூடியவர்களே தேவை.

இலங்கையில் சமாதானத்தை வெளிநாட்டவரால் கொண்டுவர முடியாது. இலங்கையில் யுத்தத்தில் ஈடுபட்டிருப்போரிடையே தெளிவும், முயற்சியுமே அதனைச் சாத்தியமாக்கும்.

அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் பேச்சு நடத்தும் பட்சத்தில் ஐ தே க. அதில் கலந்து கொண்டு பேச்சு வெற்றி பெறச் சகல ஒத்துழைப்பையும், வசதிகளையும் வழங்கி மிகவும் பொறுப்புடன் செயற்படத் தயாராக இருக்கிறது

வடபகுதியில் உள்ள அகதிகளுக்கு நிவாரணம் அளிக்க விசேட ஏற்பாடு செய்யப்பட்டு அவர்களின் துயரங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட வேண்டும்.

பேச்சுக்கள் முன்னெடுக்கப் படுவதற்கு யுத்த நிறுத்தம் செய்யப்பட வேண்டும். ஆனால் யுத்த நிறுத்த விடயத்தில் அரசும், புலிகளும் இழுபறிப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

யுத்த நிறுத்தம் குறித்து பேசிக் கொண்டிருப்பதால் சமாதான சூழ்நிலை பின்தள்ளிப் போகிறது.

திம்புவில் நடந்த பேச்சுக்கள் போல பேச்சுவார்த்தை நடத்தப்படுமாயின் நான் அதனை வரவேற்கிறேன்.

‘ஜனாதிபதி—ரணில்—புலிகள் தலைவர்’ என முத்தரப்பு பேச்சுக்கள் நடக்கலாம். அதற்கும் நாம் தயார்— என்றார் ரணில்.

(உ-3-21)

## பொதுக்கூட்டம்

யாழ். சௌக்கிய சேவை கூட்டுறவு சிக்கன சேமிப்பு கடன் நிவிர்த்திச் சங்கத்தின் வருடாந்தப் பொதுக் கூட்டம் நாளை புதன்கிழமை காலை 9 மணிக்கு யாழ் மாவட்டக் கூட்டுறவுச் சபை மண்டபத்தில் நடைபெறும்.

(இ-4)

## தேங்காய், மரக்கறி வகைகள் ஊர்காவற்றுறையில் விலை உயர்வு

ஊர்காவற்றுறை சந்தையில் மரக்கறி வகைகள், தேங்காய் போன்றவற்றின் விலைகள் அதிகரித்துள்ளன.

இப்பகுதியில் மரக்கறி உற்பத்தி செய்யப்படாததாலும் மரக்கறி வகைகள் யாழ்ப்பாணத்திலிருந்து கொண்டு செல்லப்படுவதாலும் விலை அதிகரிப்பு ஏற்பட்டதாக தெரிவிக்கப் பட்டது.

வெங்காயம் ஒரு கிலோ 70 ரூபாவாகவும் கத்தரிக்காய் 30 ரூபாவாகவும், கோவா கிலோ 20 ரூபாவாகவும், பயிற்றங்காய், பாவற்காய் என்பன கிலோ 40 ரூபாவாகவும் உருளைக்கிழங்கு கிலோ 150 ரூபாவாகவும் பச்சை மிளகாய் 60 ரூபாவாகவும், விற்கப்படுகின்றன.

தேங்காய் ஒன்று 15 ரூபா முதல் 20 ரூபா வரை விற்கப்படுகிறது தீவுப்பகுதியில் தேங்காய் விளைச்சல் குறைந்துள்ளதாலும் அனலைதீவு, நயினாதீவுப் பகுதிகளிலிருந்து தேங்காய் அங்கு வந்து சேராததாலும் விலை அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-117)

## மீனவர்கள் தங்கும் கட்டடம் காக்கைதீவில் முற்றாகச் சேதம்

### கடற்றொழிலாளர் பாதிப்பு

நவாலி, மே 13

காக்கை தீவுப் பகுதியில் உள்ள கடற்றொழிலாளர்களின் தங்கும் கட்டடம் சேதமடைந்துள்ளதால் மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

நவாலிப் பகுதியைச் சேர்ந்த நூற்றுக்கு மேற்பட்ட கடற்றொழிலாளர்கள் இந்தத் தங்குமிடத்தை கடந்த காலத்தில் பெரிதும் பயன்படுத்திவந்தனர்.

மீனவர்கள் தத்தமது தொழில் உபகரணங்களையும், உணவுப் பார்சல்களையும் பாதுகாப்பாக வைத்துப் பேணுவதற்கும் இளைப்பாறுவதற்கும் இத் தங்குமிடம் பெரிதும் பயன்பட்டு வந்தது.

சிறிய அளவில் சேதமடைந்திருந்த இத் தங்குமிடக் கட்டடம் மக்கள் மீளக்குடியேறிய பின்னர் [illegible] மிக மோசமாகச் சேதமாக்கப் பட்டுள்ளது.

## புற்றுநோய், எயிட்ஸ்நோய் பரிசோதனை

திருநெல்வேலி, மே 13

வடமாகாண புற்று நோய், எயிட்ஸ் நோய் தடுப்பு சங்கம், யாழ்ப்பாணம் பிரதான வீதியிலுள்ள சங்கக் கட்டடத்தில் இந்த நோய்கள் குறித்து இலவச பரிசோதனையை பொது மக்களுக்கு வழங்கி வருகின்றது.

வாரத்தில் செவ்வாய், புதன், வியாழன் ஆகிய நாள்களில் இங்கு புற்று நோய், எயிட்ஸ் நோய்களுக்கான ஆரம்ப பரிசோதனைகள் நடத்தப்படுகின்றன.

இனங் காணப்படுபவர்கள் வைத்திய சாலைக்கு சிகிச்சைக்காக அனுப்பிவைக்கப் படுகின்றனர்.

இதேவேளை கிராம சேவை அலுவலரின் சிபார்சின் பேரில் மிகவும் வறுமை நிலையிலுள்ள புற்றுநோயாளர்களுக்கு 150 ரூபா மாதாந்த உதவிப்பணத்தையும் நிதி கையிருப்பைப் பொறுத்து இச்சங்கம் வழங்கி வருகின்றது.

யாழ். மாநகர எல்லைக்குள் இருக்கும் பாடசாலைகளில் மாணவர்கள் மத்தியில் புற்று நோய், எயிட்ஸ்நோய் பற்றிய கருத்தரங்குகளையும் இச் சங்கம் நடத்தி வருகின்றது.

(ஐ-135)

## நயினாதீவுக்கு மீண்டும் மின்சாரம்

நயினாதீவு கிராமத்துக்கு மீண்டும் ஜெனரேற்றர் மூலம் மின்சாரம் வழங்கப் படுகிறது.

இப்பகுதிக்கு மின்சாரம் வழங்கிய ஜெனரேற்றர் பழுதடைந்தமையால் கடந்த சில மாதங்களாக மின்சாரம் வழங்கப்படுவது நிறுத்தப் பட்டிருந்தது.

மாலை 6.00 மணி முதல் இரவு 10.00 மணிவரை மின்சாரம் தற்போது வழங்கப் படுகிறது. (இ-117)

## இருசாராருக்கும் நீதி தேவை

இந்த மாதம் முதலாம் திகதி எல்லா நாடுகளிலுமுள்ள தொழிலாளர்கள் தம் ஐக்கியத்தைப் புலப்படுத்தும் நாளாக விழா எடுத்தார்கள். இவ்விழாக்கள் நடந்து முடிந்து ஐந்து நாள்களின் பின் தொடர்ச்சியாக நாள்தோறும் பல்கலைக் கழகங்களில் நடைபெறும் ஊழியர்களின் வேலை நிறுத்தம் பற்றிய அறிக்கைகள் ‘உதயன்’ பத்திரிகையில் பிரசுரமானது தெரிந்ததே.

அவை எமது சிந்தனையைத் தூண்டியுள்ளன. ஒரு புறத்தில் கல்விசாரா ஊழியர்கள், வளர்ந்து வரும் வாழ்க்கைச் செலவை சமாளிக்க நியாயமான சம்பள உயர்வு கோரியும் தம் வயோதிபத்தில் கௌரவமாக வாழ்வதற்கு ஒய்வூதிய உரிமை கோரியும் போராடுகின்றார்கள்.

மறுபுறத்தில் மாணவர்கள் பரீட்சை எடுக்க முடியாமலும் கல்வியை நிம்மதியுடன் தொடர முடியாமலும் கஷ்டப் படுகின்றார்கள்.

இருபகுதியினரின் நலன்களும் பேணப்பட வேண்டும். இப்போராட்டம் பல்கலைக்கழக ஊழியரால் மட்டும் முன்னெடுத்துச் செல்லப்படவில்லை. இது ஓர் அனுதாப வேலை நிறுத்தமுமில்லை.

ஆனால் மேற்குறிப்பிட்ட அறிக்கைகளில் ஒருசாரார், இந்தச் சூழலில் யாழ். பல்கலைக்கழகத்தில் போராட்டம் நடத்தி இப்பிராந்திய மாணவர்களின் கல்வி நிலையை பின்னடையச் செய்தல் தவறு என்ற தோரணையில் குறிப்பிட்டிருந்தனர். ஆதலால் இவ்வம்சம் ஆய்விற்குரியது?

இந்தப் போராட்டத்தால் எல்லாப்பல்கலைக்கழக மாணவர்களும் அவர்களின் குடும்பங்களும் பாதிக்கப்பட்டுள்ளனர் என்னும் பொது அம்சம் மறுக்கவோ மறைக்கவோ முடியாத உண்மை. இப்போராட்டத்தை நடத்தும் ஊழியர் சங்கத்தினர் கவனத்தில் கொள்ள வேண்டிய ஒன்று.

### வாசகர் திருமுகம்

ஆனால் இந்தப் பிராந்திய மாணவர்கள் அவர்களின் குடும்பத்தினர் பாதிக்கப்படுகின்றனர் ஆதலால் யாழ். பல்கலைக்கழக ஊழியர்கள் தங்கள் போராட்டத்தை மட்டுப்படுத்த வேண்டும், ஒத்தி வைக்க வேண்டும் என எதிர்பார்ப்போரிடம் எவ்வளவிற்கு சமூக நோக்கு உள்ளது என்பதனை நாம் விளங்கிக் கொள்ள வேண்டும்.

ஆண்டு தோறும் புதிதாக பல்கலைக்கழகம் புகும் புதிய மாணவர்களை “ராகிங்” என்ற பெயரில் (சமூகத்தின் கண்டனத்தின் மத்தியிலும்) உட்படுத்தும் எல்லை கடந்த துன்புறுத்தல் தொடர்கின்றது.

பல்கலைக்கழகத்திலிருந்து வெளியேறியவர்கள் எத்தனை பேர் இந்த பகுதிகளில் உள்ள வைத்தியசாலைகளில் பணி செய்கின்றார்கள்? எத்தனை பட்டதாரிகள் சுய விருப்பத்தில் பின்தங்கிய பிரதேசத்தில் வேலையாற்ற முன்வந்துள்ளனர். மேற்குறிப்பிட்டவை சமூக நோக்கினை முதன்மை படுத்துவோரின் முரண்பட்ட யதார்த்தத்தை பிரதிபலிக்கின்றது.

சமூகாபிமானத்தையும் மனிதாபிமானத்தையும் சுய நலனுக்காக உபயோகிக்கும் முறை மாற வேண்டிய காலம் வந்து விட்டது.

மாறி வருகின்ற சர்வதேசச் சூழலில் தமது சிரமத்தை விற்று வாழ்க்கை நடத்துவோர் தமது கௌரவமான வாழ்விற்காக முன் எப்போதும் இல்லாத வகையில் ஐக்கியபட்டுப் போராட வேண்டியது காலத்தின் தேவை என்பதை உணர்ந்தால் மனச்சலனம் ஏற்படாது.

மாணவர் சமூகத்தில் அக்கறையுள்ள எல்லோரும் தனித்தும், ஒருமித்தும் அரசாங்கத்தை உணரப்பண்ணி வேலைநிறுத்தத்தை விரைவில் முடிவுக்கு கொண்டு வர நடவடிக்கை எடுக்க வேண்டும். இது தான் இரு சாராருக்கும் வழங்கும் நீதியான சேவையாகும்.

ச. சிவராமன்

தேவாலய வீதி' சங்கானை.

## நுண்கலை மன்றத்துக்கு புத்துயிர் அளிக்கப்படுமா?

சென்ற சில ஆண்டுகளுக்கு முன் யாழ். கல்வித் திணைக்களத்தால் வட இலங்கை நுண்கலை மன்றம் எனும் பெயரில் சித்திரப் பாட சம்பந்தமாக தரம் 1 முதல் தரம் 5 (ஆசிரியர் தரம்) வரை பரீட்சைகள் நடத்தப்பட்டு சான்றிதழ்களும் வழங்கப்பட்டன.

இந்த வரிசையில் தான் வட இலங்கை சங்கீதசபைப் பரீட்சையும் நடைபெற்று வந்தது. தற்போது சங்கீதசபை பரீட்சைகள் மீண்டும் ஒழுங்காக நடைபெறும் போது 94-ம் ஆண்டில் நடைபெற வேண்டிய நுண்கலை மன்றப்பரீட்சை 1995 இல் நடைபெற்றது. அதில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் பல்வேறு தரங்களிலும் தோற்றினார்கள். அதில் நான் இறுதியாகவுள்ள ஆசிரியர் தரத்தில் தோற்றி ஒன்பது பாடங்களில் இரண்டில் சித்தியடையவில்லை. இதேபோல் பல மாணவர்கள் பல்வேறு தரங்களில் தோற்றி மீண்டும் தோற்றுவதற்கு காத்திருக்கின்றார்கள்.

தற்போது சங்கீதசபை பரீட்சை நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. நுண்கலை மன்றம் தற்போது ஏன் மீண்டும் இயங்கவில்லை?

மன்ற நிர்வாகிகள் எங்கே?

எங்களின் நிலை என்ன?

சித்திர பாடத்திற்கு ஆசிரியர்கள் தட்டுப்பாடாக உள்ள வேளையில், இத்துறையையும் வளர்ச்சியடையச் செய்து பற்றாக்குறையை நீக்கக் கூடாதா?

இம் மன்றத்திற்கு முன்னர் தலைவராக இருந்தவர் இடம்மாறி உள்ளார். வலயம் 1 இன் கல்விப்பணிப்பாளர் இதுவிடயத்தில் அக்கறை காட்ட வேண்டும்.

என்னைப் போன்று சித்திரத்துறையில் ஆர்வம் உள்ளோரின் விருப்பம் எப்போது நிறைவேற்றப்படும்.

இம்மன்றத்துக்குப் புத்துயிர் அளிக்கப்படுமா? அல்லது அது செயலிழந்து போக அனுமதிக்கப்படுமா?

சு. இராமச்சந்திரன்

கரவெட்டி.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# சின்னஞ்சிறு விளம்பரம்

### விற்பனைக்கு

மணவறை, சப்பறம் தயாரிப்பதற்கான பெரிய, சிறிய மணிகள் உருத்திராட்சம், நவகெண்டிமாலைகள், இயந்திரம் வரைவதற்கான தகடுகள் விற்பனைக்குண்டு. அத்துடன் இவ்வகையான பொருள்களை ஓடர் செய்து குறுகிய காலத்தில் இந்தியாவிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். (V.M.) வனமாலி, 19, கண்டிவீதி, கோட்டடி, சாவகச்சேரி. [46869]

சகல ரி.வி. நிகழ்ச்சிகளையும் தெளிவாக பார்ப்பதற்கு ரூபா 550/ இல் இருந்து 2500/- வரைக்கும் வீனஸ் அன்ரனா விற்பனைக்கு உண்டு வீனஸ் தனபாலசிங்கம் DIP- In Electronic Engineering (London) 284, Stanly Road, Jaffna, (நாகவிகாரை முன்பாக). [46888]

### திருமண சேவை

துர்க்கா திருமண சேவையாகிய எமது நிறுவனத்தில் பதிவு செய்தவர்கள் எம்முடன் உடன் தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம். 178, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். [46862]

### திருத்துதல்

பழுதடைந்த சகல றேடியோ, டெக், ரி.வி, மணிக்கூடுகள் திருத்திக் கொடுக்கப்படும். வீனஸ் தனபாலசிங்கம், DIP - in Electronic Engineering (London) 284, Stanly Road, (நாகவிகாரை முன்பாக) Jaffna. [46889]

## ஆயுள் வேத ஆஸ்பத்திரிக்கு ரூ. 18 லட்சம்

நவாலி மே 13

கைதடி ஆயுள்வேத போதனா வைத்தியசாலையின் திருத்த வேலைகளுக்கென ஆயுள்வேத திணைக்களம் 18 லட்சம் ரூபா நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது.

மேலும் இந்த வைத்திய சாலையின் வெளி நோயாளர் பிரிவில் தற்போது தினமும் 400 முதல் 500 வரைக்குட்பட்ட நோயாளிகள் சிகிச்சை பெற்றுச் செல்வதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (இ-100)

### பாலர் பாடசாலை ஆசிரியர் தேவை

க. பொ. த (சா. த) சித்தியடைந்த பெண்பாலாரிடமிருந்து மேற்படி பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

செயலாளர்,
பாலர் கல்விக்கழகம்,
49/5 யாழ். வீதியில் விண்ணப்பப் படிவத்தையும் விவரத்தையும் பெற்றுக் கொள்ளலாம். (46890)

### நாடகம் எழுதுவது எப்படி?

அனுபவமும் அறிவும், இலகுவாகக் கருத்துக்களை வெளியிடும் ஆற்றலும் கொண்ட அராலியூர் ந. சுந்தரம்பிள்ளை 124 பக்கங்களைக் கொண்ட தனது நூலில் 22 கட்டுரைகளை எழுதியிருக்கிறார். மாணவர்கள் மாத்திரமன்றிநாடகத்துறையில் ஈடுபட்டுவரும் அனைவரும் வாசித்துப் பயனடையலாம். தினகரனில் விமர்சகர் K. S. சிவகுமாரன். (46894)

## Royal Star Medicals Centre
## றோயல் ஸ்ரார் மெடிக்கல்ஸ் சென்ரர்

செட்டித்தெரு (A.G.A. பணிமனைக்கு முன்பாக)
பிரதான வீதி, பருத்தித்துறை.

பல ஆண்டு காலமாக செட்டித்தெருவில் இயங்கிய எமது வைத்திய நிலையத்தில் Dr. A. நாகலிங்கம் அவர்களின் ஆங்கில வைத்திய சேவை கடந்த புது வருட தினம் (14-04-1997) தொடக்கம் நடைபெறுகின்றது என்பதையும், எமது குழந்தை வைத்திய சேவை 27-07-1997 தொடக்கம் மேற்படி நிலையத்தில் நடைபெறும் என்பதையும் அன்பர்கள். ஆதரவாளர்கள் அனைவருக்கும் அறியத்தருகின்றோம்.

நன்றி.

(46884)

யாழ்ப்பாணம்
## ஆரிய திராவிட பாஷாபிவிருத்திச் சங்கம் நடத்தும்
பண்டிதர் க. சச்சிதானந்தன் அவர்களின்
## "தமிழர் யாழியல்" நூல் வெளியீட்டு விழா

1997-05-14 புதன்கிழமை மு. ப. 9.30 மணிக்கு
பலாலி ஆசிரியர் கலாசாலை (திருநெல்வேலி) யில்
அதிபர் கவிஞர் சோ. பத்மநாதன்
தலைமையில் நிகழும்

வாழ்த்துரைகள்: பேராசிரியர் பொ. பாலசுந்தரம்பிள்ளை
(துணைவேந்தர், யாழ். பல்கலைக் கழகம்)
திரு. சு. இரத்தினராசா
கல்விப் பணிப்பாளர், வலயம் I
வெளியீட்டுரை: பேராசிரியர் அ. சண்முகதாஸ்
(கலைப்பீடாதிபதி, யாழ். பல்கலைக்கழகம்)
ஆய்வுரை: பேராசிரியர் வி. கே. கணேசலிங்கம்
(விஞ்ஞான பீடாதிபதி, யாழ். பல்கலைக்கழகம்)
தொடர்ந்து
ஆ. தி. பா. சங்கத்தின் சிறப்புப்பொதுக்கூட்டம்
நிகழும்

தமிழறிஞர் ஆர்வலர் அனைவரும் வருக
நூற்பிரதி 60/-

விழா சிறப்புற வாழ்த்துகின்றோம்
## போஸ்கோ
நல்லூர், (சி/710) யாழ்ப்பாணம்.

## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

# முக்கிய அறிவித்தல்

யாழ். மாநகரசபை எல்லைக்குள் காணி உபபிரிவிடுதலோ, பழைய கட்டடங்களை எல்லை மதில்களை திருத்தவோ, புதிய கட்டடங்களை நிர்மாணிப்பதோ, அங்கீகரிக்கப்படாத உபயோகமாற்றத்தையோ யாழ். மாநகரசபையின் அங்கீகாரமின்றி மேற்கொள்ளுதலோ தண்டனைக்குரிய குற்றமாகும்.

கடந்த காலத்தில் இவ்வாறான நிகழ்வுகள் நடந்திருப்பின் உரிமையாளர் அது பற்றி மாநகரசபை திட்டமிடல் பிரிவிற்கு அறிவித்து அதனை சட்டபூர்வமான அபிவிருத்தியாக மாற்றுவதற்கு 30 - 05 - 97 வரை சந்தர்ப்பம் அளிக்கப்படுகிறது. 30 - 05 - 97 இக்குப் பின்னர் அறிவிக்கப்படும் எந்தவொரு அங்கீகாரமற்ற அபிவிருத்தியும் இந்தச் சலுகையை அடைய முடியாது. பொதுமக்கள் தாமாகவே முன்வந்து இந்த ஒத்துழைப்பை வழங்குவதன் மூலம் தமது சிரமங்களையும் தவிர்ப்பதுடன் சபையின் செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்குவதாகவும் இருக்கும். அத்துடன் நகரின் எதிர்கால வளர்ச்சியைக் கருத்திற்கொண்டு அவ்வாறான வளர்ச்சிக்குத் தடையாக அமையக்கூடிய கட்டடங்களுக்கு அனுமதியெதுவும் வழங்குவதில்லையெனத் தீர்மானிக்கப்பட்டிருப்பதனால் மக்கள் திட்டமிடல் பிரிவின் ஆலோசனையையும், அங்கீகாரத்தையும், கட்டடங்களை அமைப்பதற்கு முன்பதாகவே பெற்று செயற்படுமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றார்கள். இவ்வாறான கட்டட அபிவிருத்தி வேலைகளை கண்காணிப்பதற்கும், ஒழுங்கு படுத்துவதற்குமென சபையினால் நியமிக்கப்பட்டுள்ள உத்தியோகத்தர் குழாமிற்கு தங்கள் ஒத்துழைப்பினை வழங்குமாறும் அன்புடன் கேட்டுக் கொள்ளுகின்றேன்.

வே. பொ. பாலசிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகர அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
1997 - 05 - 12
(சி-712)

## புனர்வாழ்வு அமைச்சு- செயலகம் அகதிகள் தொடர்பாக இழுபறி

திருகோணமலை, மே 13

திருகோணமலையில் இருந்து காங்கேசன் துறைக்கு அகதிகளை அழைத்து வரும் பணி மற்றும் திருமலையில் வைத்து அகதிகளைப் பராமரித்தல் ஆகியவற்றை மாகாண புனர்வாழ்வு அமைச்சா? அல்லது பிரதேச செயலகமா? மேற்கொள்வது என்பது குறித்து இழுபறி நிலை ஏற்பட்டுள்ளது.

தற்சமயம் இந்தப் பணியை திருகோணமலை பிரதேச செயலகமே மேற்கொண்டு வருகிறது.

மாகாண புனர்வாழ்வு அமைச்சே இந்தப் பணியை மேற் கொள்ள வேண்டும். என்று கொழும்பு அதிகாரிகள் தெரிவித்து வருகின்றனர்.

தமக்கு மேலதிக கொடுப்பனவு வழங்கினால் மட்டுமே பணியாற்ற முடியும் என்று மாகாண புனர்வாழ்வு அமைச்சு அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தற்சமயம் திருகோணமலைக்கு வந்துள்ள மாகாண ஆளுநர் இந்த விடயத்தில் தலையிட்டு சமரசம் செய்ய முயன்றார். ஆயினும் இணக்க நிலை ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது. (இ-3-150)

## இலங்கை செஞ்சிலுவைச் சங்க
யாழ். கிளை
## அறிவித்தல்

இலங்கை செஞ்சிலுவைச் சங்க யாழ். கிளையின் ஆண்டுப் பொதுக்கூட்டமும் புதிய நிர்வாகத்தினர் தெரிவும் நடைபெற இருப்பதால், அங்கத்துவத்தைப் புதுப்பிப்பதற்கும், புதிதாக சேர விரும்புவோர் சேருவதற்கும் 15-05-1997 தொடக்கம் 15-08-1997 வரை கால அவகாசம் தரப்பட்டுள்ளது. விரும்புவோர் தாங்கள் வதியும் இ. செ. ச. பிரிவுகளின் தலைவர்/ செயலாளருடன் தொடர்பு கொண்டு அங்கத்துவத்தை உறுதிப்படுத்தும்படி கேட்கப்படுகின்றார்கள். பொதுக் கூட்டமும், புதிய நிர்வாகத்தினர் தெரிவும் நடைபெறும் திகதி, இடம் ஆகியவை பின்னர் அறிவிக்கப்படும்.

கௌரவ செயலாளர்
இ. செ. ச. யாழ். கிளை

73 கண்டி வீதி,
யாழ்ப்பாணம்.
12. 5. 97

(சி/713)

உ
சிவமயம்
## சிறுப்பிட்டி மேற்கு ஞான வைரவப் பெருமான் ஆலய அலங்கார உற்சவ விஞ்ஞாபனம்

நிகழும் மங்களகரமான ஈசுவரவருஷம் சித்திரை மாதம் 29 ஆம் திகதி திங்கட்கிழமை [12 - 05 - 1997] மாலை 2. 00 மணி தொடக்கம் வைரவப் பெருமானுக்கு அபிடேக ஆராதனை நடைபெற்று தினமும் தொடர்ந்து திருவிழா நடைபெறும்.

21 ஆம் திகதி புதன்கிழமை காலை 10. 00 மணிக்கு
தேர் உற்சவமும்

22 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10. 00 மணிக்கு
தீர்த்த உற்சவம்

புனிதகங்கை நிலாவரையில் நடைபெறும்.
அன்பர்கள் அனைவரும் இறைவனைத் தரிசித்து அருள்பெறுக.

உற்சவகுரு:
சிவஸ்ரீ சி. கிருஸ்ணசுவாமிக் குருக்கள் (அச்செழு)

(46891) பரிபாலன சபையினர்

## 60 ஆம் நாள் கண்ணீர்ப் பூக்கள்

தாயின் மடியில்: 01 — 08 — 1935



ஆண்டவன் திருவடியில்: 15 — 03 — 1997

## அப்பச்சி மகாலிங்கம்

கல்விப் பெருந்தகையே!
கவிதை எழுத உம்மை நாடி
நாம் வந்த போதெல்லாம்
கவி எழுதி எம்மையெல்லாம்
களிப்படையச் செய்திடுவீர்
நீர் ஆற்றிய அளப்பரிய தொண்டு
மண்ணுலகில் போதுமென்றா
விண்ணுலகம் சென்றுவிட்டீர்!
உமது ஆத்மா சாந்தி அடைய
வேண்டி இறைவனின் பாதார
விந்தங்களை இறைஞ்சுகின்றோம்.
ஓம் சாந்தி சாந்தி சாந்தி!

நவாலி முருகானந்த மகளிர்
சிக்கன கடனுதவி கூட்டுறவுச் சங்கம்.

(46872)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஈ.பி.டி.பியால் நீக்கப்பட்ட இருவரும் எம்.பி. பதவிகளை இழப்பார்களா?

## சட்டரீதியாக கடினமானது எனத் தெரிவிப்பு

கொழும்பு, மே 13

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களும், சகோதரர்களுமான ராமேஸ்வரன், ராமமூர்த்தி ஆகியோர் ஈ பி. டி. பி அமைப்பில் இருந்து வெளியேற்றப்பட்டபோதும், அவர்கள் இருவரையும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து வெளியேற்றுவது சட்ட ரீதியாக கடினமானது எனச் சுட்டிக் காட்டப்படுகிறது.

ஒரு கட்சியின் சார்பில் போட்டியிட்டு எம். பியான வர்களை அக்கட்சி நீக்கினால் உடனடியாகவே அவர் எம். பி. பதவியை இழக்கும் வகையிலும் —

அவரது இடத்துக்கு அக் கட்சியின் பட்டியலில் உள்ள அடுத்தவர் நியமிக்கப்படும் வகையிலும் — சட்டத்தில் இடம் உண்டு.

ஆனால் சுயேச்சைக் குழு ஒன்றில் போட்டியிட்டு எம். பியாகி, அவர் சார்ந்த சுயேச்சைக்குழு அவரை எம். பி பதவியை இழக்கும் வகையில் செய்ய சட்டத்தில் தெளிவான ஏற்பாடுஇல்லை.

இந்த வகையில் யாழ். மாவட்டத்தில் சுயேச்சைக் குழுவாக போட்டியிட்ட ஈ. பி. டி. பி அமைப்பின் சார்பில் தேர்தலில் நின்று வெற்றி பெற்று எம். பியாக பதவியேற்ற ராமேஸ்வரனையும், ராமமூர்த்தியையும் கட்சி வெளியேற்றிய போதும் அவர்களை எம் பி. பதவியில் இருந்து நீக்க முடியாதுள்ளது என்று சுட்டிக் காட்டப்படுகிறது.

ஈ. பி. டி. பியில் இருந்து நீக்கப்பட்ட இவர்கள் இருவரும் அரச தரப்போடு இணைந்து செயற்படவிரும்பினார்கள். அது கை கூடவில்லை.

அந்த இரு எம்.பிக்களும் தேவையா? அல்லது எமது எஞ்சிய எம். பிக்களின் ஆதரவு தேவையா? என்று ஈ. பி. டி. பி செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தா அரசிடம் பேரம் பேசியதால், இவ்விருவரின் விருப்பத்தையும் அரசதரப்பு கவனிக்காமல் விட்டு விட்டது.

**ஐ. தே. க பக்கம் சாயலாம்**

ஏனைய தமிழ்க்கட்சிகள் இவர்களை அழைத்தன. ஆனால் இந்த அழைப்பை சாதகமாக அவர்கள் பரிசீலிக்கவில்லை என்று தெரியவருகிறது.

இவர்களுடன் ஐ. தே க தொடர்பு கொண்டது. தமது கட்சியுடன் சேர்ந்து இயங்குமாறு அவர்களிடம் கோரிக்கை விடுத்தது.

சட்ட உதவி உட்பட சகல உதவிகளையும் வழங்குவதாக அவர்களுக்கு ஐ.தே.க உறுதி அளித்தது.

நாடாளுமன்றத்தில் சுயேச்சைக் குழுவாக இயங்கவும் ஐ. தே க வை ஆதரிக்கும் போக்கை கடைப்பிடிக்கவும் அவர்கள் இருவரும் இணங்கியுள்ளனர் என தெரியவருகிறது.

**தென்னிலங்கை அமைப்புடன் தொடர்பு**

இதற்கிடையில், இந்தஎம். பிக்கள் இருவரும் தென் இலங்கையில் மனிதாபிமான சேவையில் ஈடுபட்டுள்ள அமைப்புடன் இணைந்து செயற்பட முடிவு செய்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

''மனிதாபிமான சேவை அமைப்பு'' என்ற இந்த அமைப்பின் தலைவராக வண. ராகந்தலே ராகுல தேரர் இருக்கிறார். இந்த இரு எம். பிக்களும் அந்த அமைப்பின் உப - தலைவர்களாக தெரிவாகினர்.

அந்த அமைப்பின் செயலாளர் நாயகமாக சரத் ஸ்ரீ. நாணயக்காரவும், உதவிச் செயலாளர் நாயகமாக எச். எம். மசூரும் உள்ளனர்.

பொருளாளராக திருமதி பத்திராடி சில்வா உள்ளனர்.

அந்த அமைப்பு விரைவில் யாழ்ப்பாணம், திருகோணமலை, மட்டக்களப்பு பகுதிகளில் கிளைகளை அமைக்கவிருக்கிறது.

இதற்கிடையில் — ஈ. பி. டி. பி அமைப்பில் இருந்து வெளியேற்றப்பட்ட இவ்விரு எம். பிக்களும் கட்சி நிர்வாகத்துக்கு எதிராகவும் —

கட்சி நிர்வாகம் இவர்களுக்கு எதிராகவும் — மாறி மாறி குற்றச்சாட்டுக்களை சுமத்தும் செய்திகள் கொழும்புப் பத்திரிகைகளில் வெளியாகின்றன.

(இ-3)

## பற்றுச் சீட்டுப் புத்தகங்கள் படிவங்கள் கையிருப்பில் இல்லை

பருத்தித்துறை, மே 13

யாழ். மாவட்ட கல்வித் திணைக்களத்தில் படிவங்கள், வசதிகள் சேவைகள் கட்டண பற்றுச் சீட்டுப் புத்தகங்கள் என்பன களஞ்சியத்தில் கையிருப்பில் இல்லை.

பாடசாலைகளுக்குத் தேவையான வசதிகள்சேவைகள் கட்டண பற்றுச்சீட்டுப் புத்தகங்களை பாடசாலைகளே வசதிகள் சேவைகள் கட்டண நிதியிலிருந்து செலவு செய்து அச்சிடலாம்.

அவ்வாறான பாடசாலை அதிபர்கள் கோட்டக்கல்வி அதிகாரி ஊடாக கணக்காளருக்கு தேவையான பற்றுச் சீட்டுப் புத்தகங்களின் தொகையை முதலில் அறிவிக்க வேண்டும். பின்னர் கணக்காளரின் அனுமதி கிடைத்த பின்னரே அச்சிட வேண்டும். அச்சிடப்பட்ட பற்றுச் சீட்டுகளுக்கு கோட்டக் கல்வி அலுவலகங்களின் முத்திரை பதித்த பின்னரே பாவிக்க வேண்டும்.

இப்படி யாழ். கல்வித் திணைக்கள கணக்காளர் தி. சுதந்திரபாலன் அறிவித்துள்ளார். (இ-118)

## சங்கானை ஆஸ்பத்திரிக்கு டாக்டர்

திருநெல்வேலி, மே 13

பதிவு பெற்ற வைத்திய அதிகாரி ஏ. மரியதாஸ் சங்கானை அரசினர் வைத்திய சாலைக்கு இம்மாதம் முதலாம் திகதி தொடக்கம் யாழ். சுகாதார திணைக்களத்தினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

பதவியிலிருந்து ஓய்வு பெற்ற டாக்டர்களை மீள நியமிக்கும் திட்டத்தின் கீழ் இவருக்கு திருகோணமலையிலுள்ள வடக்கு — கிழக்கு மாகாண சுகாதார அமைச்சின் அனுமதியின் பிரகாரம் இந்த நியமனம் வழங்கப்பட்டுள்ளது.

(இ-135)

## முத்திரை இடப்படாத படிகள்

தென்மராட்சி, மே 13

சாவகச்சேரி மீன் சந்தையில் உள்ள வியாபாரிகள் பயன்படுத்தும் தராசுகளுக்கு முத்திரையிடப்படாத படிகள் பயன்படுத்தப்படுகின்றன.

சைக்கிள் நடுஅச்சு தேய்ந்த நிலையில் உள்ள படிகள் ஆகியவை பாவிக்கப்படுவதால் நிறை குறைவதாக தெரிவிக்கப்படுகிறது.

(இ-117)

## புதிய தபாற் பெட்டிகள்

மானிப்பாய், மே 13

மானிப்பாய் அஞ்சல்அலுவலகப் பிரதேசங்களில் சேதமடைந்து காணப்பட்ட சகல தபாற் பெட்டிகளும் அப்புறப்படுத்தப்பட்டு, அவற்றுக்குப் பதிலாக புதிய தபாற் பெட்டிகள் பொருத்தப்பட்டுள்ளன.

(இ-90)

# 'டெங்கு' காய்ச்சலும் அதனை தடுக்கும் வழி முறைகளும்

தேசிய 'டெங்கு' வாரம் தற்பொழுது நடாநாட்டில் அனுஷ்டிக்கப்பட்டு வருகிறது.

கடந்த 12ஆம் திகதி ஆரம்பமான 'டெங்கு' வாரம் 19ஆம் திகதிவரை அனுஷ்டிக்கப்படும். டெங்குக்காய்ச்சல் அறிகுறிகள் அதனைத் தடுக்கும் வழிமுறைகள் ஆகியவற்றை இக்கட்டுரை ஆராய்கிறது.

மலேரியா நோயைப் போன்று 'டெங்கு' காய்ச்சலும் ஒருவித நுளம்புகளால் பரப்பப்படுகின்றது.

இந்நோயைப்பரப்பும் நுளம்புகளாவன,

★(Aedes Egypti) - ஏடிஸ் இஜிப்ரிய்.

★ (Aedes Alborictus) - ஏடிஸ் அல்பொபிக்ரஸ்.

இதன் நுண் கிருமிகள் வைரஸ் வர்க்கமாகும். இவை A,B,C,Dஎன நான்கு வகைப்படும்.

1960ஆம் ஆண்டில் குருதியில் இந்த வைரஸ் இனம் காணப்பட்டது. 1989ஆம் ஆண்டு வரை சாதாரண காய்ச்சலை மாத்திரம் இக்கிருமிகள் உண்டாக்கின.

1989ஆம் ஆண்டிலிருந்து சாதாரண காய்ச்சல், 'டெங்கு' குருதிப் பெருக்க காய்ச்சலாகவும், டெங்கு அதிர்ச்சி நோயாகவும், ஓர் உயிர்க் கொல்லி நோயாக உருவெடுத்தது.

கீழ்க்காணும் விவரங்களிலிருந்து இந்நோயின் தாக்கத்தை அறிந்து கொள்ளலாம்.

★ 1989 இல் நோயாளிகள் 203 பேர் — இறந்தோர் 20 பேர்.

★ 1990 இல் நோயாளிகள் 1,127 பேர்—இறந்தோர் 61 பேர்.

★ 1991 இல் நோயாளிகள் 867 பேர் — இறந்தோர் 32 பேர்.

★ 1992 இல் நோயாளிகள் 557 பேர் — இறந்தோர் 26 பேர்.

★ 1994 இல் நோயாளிகள் 512 பேர் — இறந்தோர் 32 பேர்.

★ 1995 இல் நோயாளிகள் 483 பேர் — இறந்தோர் 20 பேர்.

★ 1996 (ஜனவரி—ஜூலை வரை) நோயாளிகள் 413 பேர் -இறந்தோர் 07பேர்.

இந்நோய் குறிப்பாக கொழும்பு, குருநாகலப் பிரதேசங்களில் கூடுதலாக இக்காலகட்டத்தில் காணப்பட்டது.

மேற்கூறிய இந்நுளம்புகள் நகர்ப்புற குடியிருப்புப் பகுதியிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் மற்றும் மனிதனால் உருவாக்கப்பட்ட நீர்தேங்கும் இடங்களிலும் பெருகக் கூடியவை.

மலேரியா நுளம்பைப் போன்று, தெளிவான தேங்கும் நீரில் இவை பெருகக் கூடியவை. இவை பெருகுவதற்கு சிறிது நீரே போதுமானதாகும்.

வீட்டில் உள்ள வெற்றுச் சிரட்டைகள், வெறும் ரின்கள், சாடிகள், டயர்கள், நீரை மாற்றாமல் இருக்கும் பாத்திரங்கள், மீன் தொட்டிகள், அடைக்கப்பட்ட கூரைப் பீலிகள், அடைத்த வடிகால் எறும்பு பூச்சிகள் ஏறாமல் மேசைக் காலுக்கு தண்ணீர் வைக்கும் பாத்திரங்கள், பூச்சாடிகள் ஆகியவை நுளம்பு உற்பத்திக்கு வழிவகுக்கின்றன.

இந்தநுளம்பு ஒருநோயாளியைக் கடித்து இரத்தம் உறிஞ்சும் பொழுது நோய்க் கிருமிகளும் இரத்தத்துடன் நுளம்பின் உடம்புக்குச் சென்று, அங்கு பெருகி, நுளம்பின் வாய்ப் பகுதியைச் சென்றடைகின்றன.

அந்த நுளம்பு ஒரு சுகதேகியைக் கடிக்கும் பொழுது நுண்கிருமிகள் அச்சுகதேகியின் உடலில் சேர்ந்து, விருத்தி அடைந்து நோயை உண்டாக்குகின்றன.

**நோய் அறிகுறிகள்**

சாதாரண டெங்கு காய்ச்சலில் உடல் வலி, சருமவியாதி போன்ற அறிகுறிகள் காணப்படும்.

இவர்களில் சிலர் டெங்கு குருதிப் பெருக்குக் காய்ச்சலாலோ, அல்லது டெங்கு அதிர்ச்சி நோயாலோ பாதிக்கப்படலாம்.

இந் நோய்கள் தாக்குவதற்கு காரணிகள் தெரியவில்லை.

ஆனால் திரும்பத் திரும்ப நோய் வருமிடத்தும் பலவர்க்க நுண்கிருமிகள் தாக்குவதாலும் இந்நோய் வரலாம்.

டெங்குக்குருதி பெருக்குக் காய்ச்சல் இருந்தால், வாந்தி, காய்ச்சல். வாந்தி உணர்வு, உணவில் விருப்பம் இல்லாமை போன்ற அறிகுறிகள் தென்படும்.

அத்துடன் மூக்கு, தோல், சிறுகுடல், நுரையீரல் போன்ற உறுப்புகளில் இரத்தக்கசிவு ஏற்படும்.

டெங்கு அதிர்ச்சி நோயினால் இரத்த அழுத்தம் சடுதியாகக் குறைகிறது.

சிறு பிள்ளைகளை இது தாக்கும்போது ஒன்று அல்லது இரண்டு நாள்களில் மரணம் ஏற்படலாம்.

இவ்வகை நோய்களுக்கு முறையான மருந்து கண்டு பிடிக்கப்படவில்லை. ஆஸ்பத்திரிகளில் சேலைன் ஏற்றுவார்கள். ஆஸ்பிரின் போன்ற மருந்துகள் கொடுக்கக் கூடாது.

இந்நோய் சிங்கப்பூர், கியூபா போன்ற நாடுகளில் ஒழிக்கப்பட்டது. இதற்கு முக்கிய காரணம் கடுமையான சட்ட திட்டங்களும்' சுகாதாரக் கல்வியுமே ஆகும்.

வியட்நாம், தாய்லாந்து, பிலிப்பீன்ஸ் போன்ற நாடுகளில் இந்நோயின் தாக்கம் கூடுதலாகக் காணப்படுகின்றது.

**தடுப்பு நடவடிக்கை**

இரண்டு வகையில் இந்நோயைக் கட்டுப்படுத்தலாம்.

I நுளம்பு பெருகும் இடங்களை அழித்தல்.

II நுளம்பைக் கட்டுப்படுத்தல்.

I அ. மழை நீர் தேங்காமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

ஆ. கூரையில் உள்ள வெற்று ரயர்களில் ஓட்டையாக்கப்படல் வேண்டும் அல்லது மண் போட்டு நிரப்ப வேண்டும்.

இ. வீட்டு குடிநீர் தாங்கிகள், பூச்சாடிகளில் நீரை மாற்றி சுத்தம் செய்தல்.

ஈ. வெற்று மீன் தொட்டிகளை கவிழ்த்து வைத்தல் அல்லது மூடிவிடல்.

உ. மேசைக் கால்களுக்கு நீர் வைக்கும் பாத்திர நீரை மாற்றுதல், உப்பு போட்டு வைத்தல்.

ஊ. அடைக்கப்பட்ட கூரைப் பீலிகள், வடிகால் நீர் தேங்காமல் சுத்தம் செய்தல்.

எ. வீடுகளில், வளவில்நீர் தேங்கும் இடங்களை இல்லாமல் பார்த்துக் கொள்ளல் (அத்துடன் சிரட்டை, ரின், கோம்பை முதலியவற்றை அழித்தல்)

ஏ. இது சம்பந்தமாக நண்பர்களையும், அயலவர்களையும் செய்யும் படி வற்புறுத்தல். (சுகாதாரக்கல்வி அளித்தல்)

II அ. இந் நுளம்புகள் பகலில் கடிக்கும் (காலை 4 – 6 மணி) பழக்கம் உள்ளதால் அந் நேரத்தில் நுளம்புவலை, சுருள் போன்றவற்றைப் பாவிக்கலாம்.

ஆ. புல்லெண்ணெய் உடம்புக்கு பூசலாம்.

இ. நுளம்பைக் கொல்லும் கிருமிநாசனி பாவிக்கலாம். ★

க. மயில்வாகனம்.
(பொதுச் சுகாதாரப் பரிசோதகர்.)

Digitized by Noolaham Foundation noolaham.org | aavanaham.org

# வன்னி சென்றவரின் ஓய்வூதியம் இங்கே பெறப்பட்ட மோசடி அம்பலம்

## தென்மராட்சி செயலகத்தில் கண்டுபிடிப்பு

தென்மராட்சி, மே 13

இடம்பெயர்ந்து வேறு மாவட்டம் சென்ற ஒருவரின் ஓய்வூதியத்தை இங்குள்ளவர்கள் பெற்றுவந்த மோசடி ஒன்று தென்மராட்சி பிரதேச செயலர் பிரிவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. இந்த மோசடி கடந்த பதின்மூன்று மாதங்களாக நடைபெற்று வந்திருக்கிறது.

மோசடி கண்டுபிடிக்கப்பட்டதைத் தொடர்ந்து 13 மாதங்களாக ஓய்வூதியப் பணத்தை வங்கியிலிருந்து பெற்ற தரப்பினர் அதனைச் செயலகத்தில் மீளச் செலுத்தினர். இந்த வகையில் மொத்தம் 43 ஆயிரம் ரூபா பிரதேச செயலகத்திற்கு கடந்த வெள்ளிக்கிழமை மீளச் செலுத்தப்பட்டது.

இது குறித்து அறியவருவதாவது:-

வன்னிக்கு இடம்பெயர்ந்து சென்ற பளைப்பகுதியைச் சேர்ந்த ஓய்வூதியர் ஒருவரின் ஓய்வூதியக் கொடுப்பனவை கடந்த 13 மாதகாலமாகப் பெற்றுவந்த மோசடி ஒன்று தென்மராட்சி பிரதேச செயலகத்தினரால் கண்டுபிடிக்கப் பட்டிருக்கிறது.

வன்னியில் தங்கியிருந்த பிரஸ்தாப ஓய்வூதியர் தனது ஓய்வூதியத்தை அங்கு பெற வசதியாக மாற்றித்தரும்படி தங்கியிருந்த பகுதி அரச அதிபருக்கு விண்ணப்பித்திருந்தார். இது தொடர்பாக அந்த மாவட்டச் செயலக ஓய்வூதியக் கிளையினர் தென்மராட்சி பிரதேச செயலகத்துக்கு அறிவித்திருந்தனர்.

ஆனால் பிரதேச செயலக ஓய்வூதியக் கிளையின் பதிவேடுகளின் பிரகாரம் குறிப்பிட்ட ஓய்வூதியரின் வவுச்சர்கள் மாதாந்தம் அனுப்பப்பட்டு இங்குள்ள அவரது பகுதி கிராம அலுவலரின் சிபார்சுடன் ஓய்வூதியத் தொகை வங்கியில் இருந்து பெறப்பட்டிருப்பது தெரிய வந்தது.

உடனடியாக சம்பந்தப்பட்ட கிராம அலுவலருடன் தொடர்பு கொண்டு நடத்திய விசாரணைகளை அடுத்து இந்த மோசடி கண்டுபிடிக்கப் பட்டுள்ளது. கடந்த 13 மாதகாலமாக வங்கியில் இருந்து பெறப்பட்ட ஓய்வூதியத் தொகையை முழுவதுமாக திருப்பிச் செலுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக தென்மராட்சி பிரதேச செயலக வட்டாரங்களில் இருந்து தெரிய வந்தது.

இறந்தவர்களினதும், வெளி மாவட்டங்களுக்கு இடம் பெயர்ந்து சென்றுள்ளவர்களினதும் ஓய்வூதியக் கொடுப்பனவை இங்குள்ள சிலர் மோசடி செய்து பெற்று வருவது குறித்து முறைப்பாடுகள் தெரிவிக்கப்பட்டு வருகின்றன.

இம்மாத ஓய்வூதிய வவுச்சர்களை சம்பந்தப்பட்ட ஓய்வூதியர்களே நேரில் வந்து பெற்றுக் கொள்ள வேண்டும் என அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இதனையடுத்து ஓய்வூதியம் பெறுவதில் இடம்பெறும் மேலும் பல தில்லுமுல்லுகள் வெளியாகலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. (ஐ-117)

## மன்னாரில்

# தற்காலிகக் கடைகளை மீண்டும் செயற்படுத்த படையினர் முயற்சி

கொழும்பு, மே 13

மன்னாரில் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பகுதிகளுக்கான உணவுப் பொருள்களை விநியோகிப்பதற்கான தற்காலிக கடைகள் 2 ஆவது தடவையாக நேற்று உயிலங்குளத்திலும், 10 ஆம் கட்டையிலும் செயற்பட இருந்தன.

இதே போன்ற தற்காலிக கடைகள் கடந்த திங்கட்கிழமை படையினரால் அமைக்கப்பட்ட போது, எவரும் வந்து பொருள்களை கொள்வனவு செய்யவில்லை.

தற்காலிகக் கடைகள் இராணுவத்தின் கட்டுப்பாட்டுப் பகுதியிலேயே அமைக்கப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (இ-3-21)

# நவாலி, மானிப்பாய் பகுதிக்கு பஸ் சேவை நடத்தக் கோரிக்கை

நவாலி, மே 13

மானிப்பாய், நவாலிப்பகுதி மக்களின் வசதிகருதி இப்பகுதி ஊடாகப் புதிய பஸ் சேவைகளை ஆரம்பிக்குமாறு கோரிக்கை விடுவிக்கப்பட்டிருக்கிறது.

கடந்த 9 ஆம் திகதி ஆனைக்கோட்டை கிராமசபை மண்டபத்தில் நடந்த பிரசைகள் குழுக் கூட்டத்தில் இக்கோரிக்கை விடுக்கப்பட்டது.

கூழாவடி இராணுவ முகாம் பிரிவுக்குட்பட்ட பிரசைகள் குழு உறுப்பினர்கள் இக் கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இப் பகுதிக்கு தொலைபேசி இணைப்பை அமைத்தல், சேதமடைந்துள்ள வீதிகளைத் திருத்துதல், விலைக் கட்டுப்பாட்டை அமுல் செய்தல், திருட்டுச் சம்பவங்களைத் தடுத்தல் போன்ற விடயங்கள் தொடர்பாக கூட்டத்தில் கோரிக்கைகள் விடுக்கப்பட்டடன

ஆனைக்கோட்டை, சுதுமலை, மானிப்பாய், நவாலி உயரப்புலம், சாவற்காடு பகுதி கிராமசேவையாளர் பிரிவுகளுக்கான பிரசைகள் குழுக்களும் இக் கூட்டத்தில் அமைக்கப்பட்டன. (ஐ-100)

## ஐ.தே.க.5-தமிழ்க்கட்சிகள் சந்திப்பில்

# இணக்கம் கண்ட விடயங்களை எழுத்து மூல ஆவணமாக்க முடிவு

கொழும்பு, மே. 13

இனப்பிரச்சினை தொடர்பாக ஐ.தே கவுக்கும், தமிழ் கட்சிகளுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள இணக்கம் பற்றிய விடயங்கள் எழுத்து மூல ஆவணமாக்கப்பட விருக்கிறது.

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர்களுக்கும் —

தமிழர் விடுதலைக் கூட்டணி, ஈ.பி.டி.பி., புளொட், இ.தொ.கா., முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய ஐந்து தமிழ்க் கட்சிகளின் எம். பிக்களுக்கும் இடையில் —

இனப்பிரச்சினை விவகாரம் தொடர்பாக பல கட்கங்களில் இடம் பெற்று வந்த பேச்சுக்களில் பல விடயங்கள் குறித்து இணக்கம் ஏற்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இணக்கம் காணப்பட்ட விடயங்களையே ஆவணமாக்க தற்போது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

எதிர்வரும் 30 ஆம் திகதி மீண்டும் ஐ தே.கவும், தமிழ் கட்சிப் பிரதிநிதிகளும் சந்திக்கும் போது இந்த ஆவணம் சமர்ப்பிக்கப்படும் என்று தமிழர் விடுதலைக் கூட்டணி எம். பியான நீலன் திருச்செல்வம் தெரிவித்தார்.

அதேவேளை —

ஐந்து தமிழ்க் கட்சிகளின் குழு எதிர்வரும் 30 ஆம் திகதி நீதி, அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸுடன் பேச்சு நடத்த விருக்கிறது. (உ-3-150)

## விளையாட்டு நிகழ்வுகள்

யாழ்ப்பாணம், மே 13

நவாலி அட்டகிரி சைவ வித்தியாசாலை வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டிகள் நாளை புதன் கிழமை பிற்பகல் 12.45 மணிக்கு மேற்படி பாடசாலை விளையாட்டு மைதானத்தில் நடைபெறும்.

வித்தியாலய அதிபர் வ. இராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெறும் இப்போட்டிகளின் போது மானிப்பாய் லயன்ஸ் கழகத் தலைவர் செ. கேசவராயன் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். (இ)

## இலவசம்

கால் நடைகளுக்கு சத்துணவுமிக்க கினி நேபியா புல்லு நாற்றுக்கள் அலுவலக வேலை நேரத்தில் வெள்ளி, சனி ஆகிய நாள்களில் இலவசமாக வழங்கப்படும் என்று 'மில்க்வைற்' ஸ்தாபனத்தினர் அறிவித்துள்ளனர்.

## புனரமைப்பு

நவாலி, மே 13

ஆனைக்கோட்டை கிராம அபிவிருத்திச் சங்கம் புனரமைப்புச் செய்யப்பட்டுள்ளது. (ஐ-100)

## மானிப்பாய் கூட்டுறவுச் சங்க தலைவர்

நவாலி, மே 13

மானிப்பாய் ப.நோ.கூ. சங்கத்தின் தலைவராக சி. மார்க்கண்டு தெரிவு செய்யப்பட்டுள்ளார். (ஐ-100)

## தீவுப்பகுதிகளில் மீனுக்குத் தட்டுப்பாடு

யாழ்ப்பாணம், மே 13

அனலைதீவு, நயினாதீவுப் பகுதிகளில் மீனுக்கு பெரும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இப்பகுதிகளில் மீன்பிடிப்பதற்கு தற்போது கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளதால் மீன் பிடிக்கச் செல்வோரின் எண்ணிக்கை குறைந்துள்ளது.

முகாமுக்கு முன்னால் உள்ள கடலில் குறிப்பிட்ட அளவு தூரத்தில் மீன்பிடிக்க மட்டுப்படுத்தப்பட்டதால் [illegible] செல்வதால் மீனுக்குத் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. (இ-117)

## சமய நிகழ்வுகளில்

யாழ்ப்பாணம், மே 13

கச்சேரியடி கற்பக விநாயகர் தேவஸ்தான மகோற்சவம் இன்று செவ்வாய்க்கிழமை நண்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி தொடர்ந்து 10 தினங்கள் நடைபெறும்.

எதிர் வரும் 21 ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு தேர் உற்சவமும், 22 ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10 மணிக்கு தீர்த்தோற்சவமும் இடம் பெறும்.

23 ஆம் திகதி வெள்ளிக்கிழமை மாலை 4 மணிக்கு தண்டிகையில் விநாயகப் பெருமான் வீதியுலா வருவார். (இ)

★ ★ ★

நெல்லியடி, தடங்கன் புளியடி முருகமூர்த்தி ஆலய வருடாந்த உற்சவம் இன்று செவ்வாய்க் கிழமை காலை 9 மணிக்கு கொடியேற்றத் துடன் ஆரம்பமாகும்.

21ஆம் திகதி புதன்கிழமை காலை 9 மணிக்கு தேரும், அடுத்த நாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறும். (உ)

★ ★ ★

யாழ்ப்பாணம் வண்ணார் பண்ணை அருள்மிகு ஸ்ரீ வீர மாகாளி அம்மன் வருடாந்த மஹோற்சவம் இன்று முற்பகல்10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகும்.

19ஆம் திகதி வியாழக் கிழமை காலை 8 மணிக்கு ரதோற்சவமும், அடுத்தநாள் காலை தீர்த்தோற்சவமும் நடைபெறும். (உ)

★ ★ ★

கைதடி வீரகத்திப்பிள்ளையார் கோயிலில் எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ பருவதவர்த்தனி அம்பாள சமேத இராமலிங்க சுவாமிக்கு 233 ஆண்டுகளின் பின் நேற்று மஹோற்சவம் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. தொடர்ந்து 11 தினங்கள் திருவிழா நடைபெறும். (இ-4)

★ ★ ★

நுணாவில் மேற்கு விளைவேலி மருதடி வீரகத்தி விநாயகர் தேவஸ்தானத்தில் மஹோற்சவப் பெருவிழா இன்று செவ்வாய்க்கிழமை நண்பகல் 12மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

எதிர்வரும் 21 ஆம் திகதி புதன்கிழமை காலை தேர்த் திருவிழாவும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும். (இ-4)

★ ★ ★

யாழ்ப்பாணம், மே 13

கோண்டாவில் தில்லையம்பதி அருள்மிகு ஸ்ரீ சிவகாமி அம்பாள் திருக்கோயிலின் வைகாசி மகோற்சவப் பெருவிழா இன்று செவ்வாய்க் கிழமை முற்பகல் 10 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது.

எதிர் வரும் 21 ஆம் திகதி புதன்கிழமை ரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் நடைபெறும். (இ-4)

# நோர்வே அமைப்பின் செயலாளர் உட்பட இருவர் வவுனியா வந்தனர்

## அகதி முகாம்களுக்கு விஜயம்

வவுனியா, மே 13

நோர்வேயில் அரசியல் தஞ்சம் கோரியுள்ள இலங்கைத் தமிழர்களுக்காக குரல் எழுப்பிவரும் தஞ்சம் புகுந்தவர்களுக்கான நோர்வே அமைப்பின் செயலாளர் நாயகமும் மற்றும் ஒரு நோர்வே நாட்டு அதிகாரியும் நேற்று வவுனியாவுக்கு விஜயம் செய்தனர்.

வவுனியாவில் உள்ள அகதி முகாம்களுக்கு இவர்கள் சென்று மக்கள் அனுபவிக்கும் இன்னல்களைக் கேட்டறிந்தனர்.

நேற்று காலை வந்த இவர்கள் மாலையே கொழும்பு திரும்பினர்,

நோர்வேயில் தஞ்சம் கோரிய 280 இலங்கைத் தமிழர்களை இலங்கைக்கு திருப்பி அனுப்ப நோர்வே எடுத்துள்ள முடிவை எதிர்த்து வரும் இந்த அமைப்பு இலங்கையின் மனித உரிமை நிலை பற்றி நேரில் ஆராயவே இலங்கை வந்துள்ளது.

நோர்வே நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஐவரை இலங்கைக்கு அனுப்பி இலங்கை நிலைவரம் குறித்து நேரில் அறிய இந்த அமைப்பு ஏற்பாடு செய்திருந்தது.

எனினும் இலங்கைத் தூதரகம் விஸா வழங்காததால் அக்குழு இலங்கைவரவில்லை.

இவர்களுக்கான விஸா மறுக்கப்பட்டதை அடுத்தே தஞ்சம் புகுந்தவர்களுக்கான நோர்வே அமைப்பின் செயலாளர் நாயகமும் மற்றும் ஒரு நோர்வே நாட்டு அதிகாரியும் வவுனியா வந்து திரும்பி உள்ளனர். (இ-3)

# யாழ்., மன்னார் மாவட்டங்களில் ஆசிரியர்களுக்கு பற்றாக்குறை

வவுனியா, மே 13

வடக்கு, கிழக்கு மாகாணத்தில் ஆரம்பவகுப்புகளுக்கும் மற்றும் ஆங்கிலம், சித்திரம், கணிதம், விஞ்ஞானம் போன்ற பாடங்களைக் கற்பிப்பதற்கும் ஆசிரியர்கள் பற்றாக்குறை பெருமளவில் காணப்படுவதாகச் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது-

யாழ். மாவட்டத்தில் மொத்தமாக ஆயிரத்து 134 ஆசிரியர்களுக்கான வெற்றிடங்களும் மன்னார் மாவட்டத்தில் 230 வெற்றிடங்களும் காணப்படுகின்றன.

யாழ். மாவட்டத்தில் ஆரம்ப ஆசிரியர்களுக்கான 586 வெற்றிடங்களும் ஆங்கில ஆசிரியர்களுக்கான 438 வெற்றிடங்களும, சித்திர பாட ஆசிரியர்களுக்கான 43 வெற்றிடங்களும், கணித பாட ஆசிரியர்களுக்கான 25 வெற்றிடங்களும் மற்றும் விஞ்ஞானம், விவசாயம், கைத்தொழில் ஆகிய பாட ஆசிரியர்களுக்கான முறையே 5, 6, 1 வெற்றிடங்களும் காணப்படுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை— மன்னார் மாவட்டத்தில் 68 ஆரம்ப ஆசிரியர்களுக்கான வெற்றிடங்களும், 61 ஆங்கில ஆசிரியர்களுக்கான வெற்றிடங்களும், 10 சித்திரபாட ஆசிரியர்களுக்கான வெற்றிடங்களும், 32 கணித பாட ஆசிரியர்களுக்கான வெற்றிடங்களும், விஞ்ஞானம், விவசாயம், கைத்தொழில் ஆகிய பாட ஆசிரியர்களுக்கான முறையே 8, 8, 5, வெற்றிடங்களும் உள்ளன.

இதுபற்றி வடக்கு—கிழக்கு மாகாண சபை ஜனாதிபதிக்கு தெரியப்படுத்தியது என்றும் —

இந்த வெற்றிடங்கள் அந்தந்த மாவட்டங்களிலிருந்து நிரப்பப்படும் என்று ஜனாதிபதி தெரிவித்தார் என்றும் தெரிவிக்சப்பட்டது (இ-5)

## காணி சுவீகரிப்பு கிளை

யாழ். செயலகத்தின் காணி சுவீகரிப்புக்கிளைப்பிரிவு மீண்டும் செயற்பட ஆரம்பித்துள்ளது. (இ-100)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் இளைஞர் காணாமற்போகும் சம்பவங்களுக்கு முடிவு வேண்டும்

## கூட்டணி எம்.பி. கோரிக்கை

கொழும்பு, மே 13

இந்த அரசாங்கம் பதவிக்கு வந்த பின்னரும் தமிழ் இளைஞர்கள் காணாமற் போகும் எண்ணிக்கை அதிகரித்தே வந்துள்ளது. இந்த துக்ககரமான நிகழ்வைத் தொடரவிடாது இதனை முடிவுக்குக் கொண்டுவர வேண்டும்.

திருகோணமலை மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் அ. தங்கத்துரை நாடாளுமன்றத்தில் மேற்கண்டவாறு கோரிக்கை விடுத்தார்.

1995 டிசம்பர் மாதம் முதல் 1997 மார்ச் மாதம் வரை 648 தமிழ் இளைஞர்கள் காணாமற்போய் இருப்பதாக சர்வதேச மன்னிப்புச் சபையின் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

1983 வன்செயல் காலத்தில் இடம் பெற்றதை விட இது பல மடங்குகள் அதிகம் ஆகும்.

இவ்வளவு குறுகிய காலத்தில் 648 இளைஞர்கள் காணாமற் போய் இருப்பது தமிழ் மக்கள் மத்தியில் பீதியை ஏற்படுத்தி இருக்கிறது.

இளைஞர் ஒருவர் பொலீஸாரால் அழைத்துச் செல்லப்பட்டால் அதுபற்றி அவரின் பெற்றோர் பொலீஸ் நிலையம் சென்று விசாரித்தால் — அவர்களும் பொலீஸாரின் துன்புறுத்தலுக்கு உள்ளாகிறார்கள்.

நாவற்குழி இராணுவ முகாம் தாக்கப்பட்டபோது நடைபெற்ற சுற்றிவளைப்புத் தேடுதலின்போது காணாமற்போனோர் குறித்து இன்னும் தகவல் இல்லை.

இப்படி அவர் கூறினார்.

## சிறு தானியம் நல்ல விளைச்சல்

மிளகாய், பயிற்றங்காய், எள்ளு போன்ற பயிர்வகைகள் வலிகாமப்பகுதியில் அதிகளவு பயிரிடப்பட்டு நல்ல விளைச்சலையும் கண்டுள்ளன.

எனினும் கிளிகள், காகங்களால் விவசாயிகள் பாதிக்கப்பட்டு வருகின்றனர்.

(இ-90)

## வடக்கில் கைதான 83 பேருக்கு பிணை

கொழும்பு, மே 13

வடக்கில் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டிருந்த 83 இளைஞர், யுவதிகள அனுராதபுரம் நீதிமன்றத்தால் கடந்த வாரம் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இவர்களில் 64 பேர் 2 ஆயிரத்து 500 ரூபா பிணையிலும் 19 பேர் 25 ஆயிரம் ரூபா பிணையிலும் செல்ல அனுமதிக்கப்பட்டனர்.

இவர்களில் 30 பேர் அன்றே பிணை செலுத்தி விடுதலையானார்கள்.

ஏனையோர் பிணை செலுத்தாததால் தொடர்ந்து தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். (இ-3)

## மதத்திய வங்கியின் உதவி அதிகரிப்பு

ஆசிய அபிவிருத்தி வங்கி இந்த வருடம் இலங்கைக்கு வழங்கும் உதவியின் அளவை அதிகரிப்பதற்கு உறுதியளித்துள்ளது.

இந்த வங்கியானது கடந்த வருடம் 16 கோடி டொலரை இலங்கைக்கு வழங்கியது.

இவ்வருடம் 20 கோடி டொலர் வழங்க உறுதி அளித்துள்ளது.

அடுத்த வருடம் இந்தத் தொகை இன்னும் அதிகரிக்கப்படும் என்று கூறுப்படுகின்றது. (இ)

# சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரி உட்பட 3 அதிகாரிகள் தற்காலிக நீக்கம்

கொழும்பு, மே 13

கொழும்பு மத்திய வங்கி குண்டு வெடிப்பு தொடர்பாக நடந்த விசாரணைகளின் எதிரொலியாக வங்கியின் சிரேஷ்ட பாதுகாப்பு அதிகாரி உட்பட 3 சிரேஷ்ட அதிகாரிகள் தற்காலிகமாக வேலை நீக்கம் செய்யப்பட்டுள்ளனர்.

இந்தக் குண்டு வெடிப்பு தொடர்பாக இவர்கள் கவனயீனமாக செயற்பட்டார்கள் என்ற குற்றச் சாட்டின் பேரிலேயே தற்காலிக வேலை நீக்கம் செய்யப்பட்டனர்.

குண்டு வெடிப்பின் போது வங்கியில் பாதுகாப்புக்கு வைக்கப்பட்டிருந்த 708 ரவைகளில் 599 ரவைகள் காணாமற்போன விடயம் தொடர்பாக 6 மாத காலத்தின் பின்பே இவர்கள் பொலீஸில் முறைப்பாடு செய்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

(இ-3-150)

# குடாநாட்டுக்குள் வருவோரை விட வெளியேறுவோரே அதிகம்

## புள்ளி விவரங்கள் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், மே 13

யாழ். மாவட்டத்தில் இருந்து வெளிமாவட்டங்களுக்கு கப்பல் மூலம் சென்றவர்களின் எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பகுதியினரே மீளத் திரும்பியுள்ளனர் என யாழ். செயலக புள்ளி விவரங்கள தெரிவிக்கின்றன.

இடம்பெயர்வின் பின்னர் கடந்த வருடம் ஏப்ரல் 19-ம் திகதி வலிகாமம் திரும்பிய மக்களில் கடந்த மாதம் வரவை கப்பல் மூலமாக தெற்கே 34 ஆயிரத்து 943 பேர் சென்றுள்ளனர்.

ஆனால் தெற்கில் இருந்து கடந்த மாத இறுதிவரை 11 ஆயிரத்து 86 பேரே குடாநாட்டுக்குள் திரும்பியுள்ளனர்.

தெற்கே செல்பவர்களில் பெரும் பான்மையானவர்கள் வடக்கே திரும்பவில்லை என்பதையே இந்தப் புள்ளி விவரங்கள் எடுத்துக்காட்டுவதாக சுட்டிக்காட்டப்பட்டது.

இதேவேளை — இக்காலப் பகுதியில் வெளிமாவட்டங்களில் இருந்து குடாநாட்டுக்கு கப்பல் மூலம் 41 ஆயிரத்து 973 அகதிகளும் —

யாழ். கடலேரி ஊடாக 6 ஆயிரத்து 893 அகதிகளும் — யாழ். மாவட்டத்துக்கு வந்து சேர்ந்துள்ளனர் என்றும் செயலக புள்ளி விவரங்கள் தெரிவித்தன.

இங்கிருந்து விமான மூலம் சென்றவர்களில் சுமார் 20 சத வீதமானவரே திரும்பி உள்ளனர் என்றும் மதிப்பிடப்பட்டுள்ளது. (இ-3)

## பாணின் தரம் குறித்து முறையிட அறிவுறுத்து

திருகோணமலை, மே 13

பாணில் வண்டுகள் மற்றும் உடலுக்குப் பாதகமான பொருள்கள் இருக்கக் காணப்பட்டால் அதுபற்றி தமது பகுதி பொது சுகாதார பரிசோதகருக்கு அல்லது யாழ். நகரிலுள்ள பிராந்திய சுகாதார சேவை பிரதி மாகாணப் பணிப்பாளர் பணிமனைக்கு நேரடியாக தகுந்த ஆதாரத்துடன் முறைப்பாடு செய்யுமாறு யாழ். மாவட்ட உணவு, மருந்து பரிசோதகர் சி. மகாதேவன் பாவனையாளர்களைக் கேட்டுள்ளார்.

அண்மையில் பொதுமக்கள் செய்த முறைப்பாட்டை அடுத்து உணவு, மருந்து பரிசோதகரினால் கோப்பாய் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவிலுள்ள பேக்கறிகளில் திடீர்ப் பரிசோதனை மேற்கொள்ளப்பட்டது.

வண்டுகள் காணப்பட்ட நிலையில் பாண் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தது கண்டு பிடிக்கப்பட்டு பேக்கறி உரிமையாளர்கள் இது விடயமாக எச்சரிக்கை செய்யப்பட்டனர்.

சுகாதார விதிகளுக்கிணங்க பேக்கறிகளை நடத்துமாறும் பேக்கறி உரிமையாளர்களுக்கு பணிப்புரை வழங்கப்பட்டது. (இ-135)

## கைதானோர் சங்கக் கூட்டம்

காணாமற் போனோர் விடயமாக உடனடி நடவடிக்கை மேற்கொள்ளவென அவசர கூட்டம் ஒன்று நாளை புதன்கிழமை காலை 10 மணிக்கு 342' ஸ்ரான்லி வீதியிலுள்ள கைதானோர், காணாமற் போனோர் பாதுகாவலர் சங்க தலைமைச் செயலகத்தில் நடைபெறவுள்ளது.

காணாமல் போனோர் பாதுகாவலர் சங்கமும் அன்னையர் முன்னணியினரும் இணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்தக் கூட்டத்திற்கு காணாமற் போனோர் சார் [illegible] ளது. (இ-3)

## இலங்கைக் குடும்பம் ஒன்றிடம் பணம் பறிப்பதற்கு முயற்சி

### மைலாப்பூரில் 4 இளைஞர் கைது!

கொழும்பு, மே 13

மைலாப்பூரில் வசித்து வந்த இலங்கைத் தமிழ்க்குடும்பம் ஒன்றிடம் பலாத்காரமாகப் பெருந்தொகைப் பணத்தைப்பெற மேற்கொள்ளப்பட்ட முயற்சி பொலீஸாரால் முறியடிக்கப்பட்டது.

ஆயுதபாணிகளாக வந்த இலங்கையைச் சேர்ந்த நான்கு இளைஞர்கள் இரண்டு இலட்சம் ரூபா பணம் தேவை என புலிகள் கோருவது போன்ற கடிதம் ஒன்றை குடும்பப் பெண்ணிடம் கையளித்தனர் என்றும்—

அப்பெண் தனது கணவருடன் கலந்தாலோசித்து விட்டு பணத்தைத் தருவதாக கூற இளைஞர்கள் திரும்பிச் சென்றுவிட்டனர் என்றும்— தெரிவிக்கப்பட்டது.

அப்பெண் இதுபற்றி பொலீஸாருக்கு தகவல் கொடுக்கவே பொலீஸார் ஓட்டோ சாரதிகள் போன்றும் வியாபாரிகள் போன்றும் மாறுவேடம் பூண்டு பல்வேறு இடங்களில் மறைந்திருந்தனர்.

பணத்தைப் பெறுவதற்காக வந்திருந்த நான்கு இளைஞர்களையும் அவர்கள் சுற்றிவளைத்துக் கைது செய்தனர்.

ஜெயா என்று அழைக்கப்படும் சிவகுமார் (வயது 27) என்ற இளைஞனும் அகதிமுகாம் ஒன்றைச் சேர்ந்தவர்களான ரோமியோ (வயது 23), யேசுதாஸ் (வயது 26), ரவீந்திரன் (வயது 23) ஆகியோருமே கைதானவர்கள் ஆவர்.

(இ-5)

## விடுவிக்கப்பட்ட மூவர் மீண்டும் கைதாகினர்

கொழும்பு, மே 13

யாழ் குடாநாட்டில் கைது செய்யப்பட்டு களுத்துறை மகஸின் சிறைச்சாலைகளில் தடுத்துவைக்கப்பட்டு கடந்த வெள்ளிக்கிழமை அனுராதபுரம் நீதிமன்றில் வைத்து விடுவிக்கப்பட்டவர்களில் மூவர் மீண்டும் கைது செய்யப்பட்டு விசாரணையின் பின்னர் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

கொள்ளுப்பிட்டியில் உள்ள விடுதி ஒன்றில் வைத்தே மூவரும் கைது செய்யப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது. இவர்கள் விடுதியை அடைந்த ஒரு சில மணி நேரத்துக்குள்ளேயே கைது செய்யப்பட்டனர்.

மனித கௌரவத்துக்கான மன்றச் செயலர் செல்வி மகேஸ்வரி வேலாயுதம் இவர்கள் மூவரும் பிணையில் விடுவிக்கப்பட்டவர்கள் என்று நிரூபித்த பின்னர் கைதான மூவரும் விடுவிக்கப்பட்டனர். (இ-5)

## பயிற்சி முகாம்

திருநெல்வேலி, மே 13

வலி. தென் மேற்கு (சண்டிலிப்பாய்) பிரதேச செயலர் பிரிவில் தேசிய இளைஞர் சேவை மன்றத்தினால் கரபந்தாட்டம், வலைப்பந்தாட்டம் ஆகியவற்றுக்கான பயிற்சி முகாம் விரைவில் நடத்தப்படவுள்ளது.

இதற்கான ஒழுங்குகளை தேசிய இளைஞர் சேவைகள் மன்ற யாழ். மாவட்ட அலுவலர் தி. சிவதட்சணாமூர்த்தி மேற்கொண்டுள்ளார்.

(இ-135)

## புளியங்குளம் வைத்தியசாலை ஹெலித் தாக்குதலால் சேதம்

### 3 பொதுமக்கள் பலி!

கொழும்பு, மே 13

புளியங்குளம் வைத்தியசாலை மற்றும் அதனைச் சூழவுள்ள பகுதிகளைநோக்கி இரு "எம் ஐ. 24" ரக ஹெலிக்கொப்டர்கள் தாக்குதலை மேற்கொண்டதில் மூன்று பொதுமக்கள் பலியானதாக புலிகளின் அறிக்கை ஒன்றில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

ஆறுமுகம் கருப்பையா (வயது 45), திருநாவுக்கரசு (வயது 45), பஞ்சலிங்கம் ஆகியோரே இறந்தவர்கள் ஆவர்.

புளியங்குளம் வைத்தியசாலை மீண்டும் செயற்பட முடியாத அளவுக்குச் சேதமடைந்துள்ளதாகவும் —

வைத்தியசாலையை வேறோர் இடத்துக்கு மாற்றுமாறு வைத்தியசாலை இபக்குநர் வவுனியா அரசாங்க அதிபருக்கு வேண்டுகோள் விடுத்துள்ளதாகவும்- தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் படையினர் கிளிநொச்சியில் இருந்தும் நொச்சி மோட்டையில் இருந்தும் புலிகளின் கட்டுப்பாட்டில் உள்ள பகுதிகளை நோக்கி தொடர்ந்து ஷெல் தாக்குதல்களை நடத்திவருகின்றனர். (இ-5)

## நலன்புரிக்கழக வகுப்பு

வலிகாமம் தெற்கு, மே 13

யாழ்ப்பாணம் கல்வி வலயம் ஒன்றின் நலன்புரிக்கழகத்தின் ஆதரவில் முகாமைத்துவ, பொது நிர்வாக நிதிப் பிரமாணங்கள் பற்றிய வகுப்பு நல்லூர் விக்கினேஸ்வரா பாடசாலை மண்டபத்தில் சமீபத்தில் நடத்தப்பட்டது,

யாழ். கல்வித்திணைக்கள நிர்வாக அதிகாரி கே. மற்றாஸ் மெயில் தலைமையில் கல்வி வலயம் ஒன்றின் பணிப்பாளர் சு. இரத்தினராசாவினால் வகுப்புக்கள் ஆரம்பித்து வைக்கப்பட்டன.

கல்வித்திணைக்கள கணக்காளர் தி. சுதந்திரபாலன், உடுவில் பிரதேச செயலக நிர்வாக அதிகாரி எஸ் ஆர். ஜெயப்பிரகாசம் ஆகியோர் இங்கு கருத்துரை வழங்கினர். (ஐ-152)

## பாராட்டுவிழா

நெடுந்தீவு, மே 13

நெடுந்தீவு மேற்கு பாரதி வித்தியாசாலை அதிபராகக் கடமையாற்றி கடந்த மாதத்தில் ஓய்வுபெற்ற திருமதி நவபோகம் நரேந்திரனின் சேவையைப்பாராட்டி மேற்படி பாடசாலையின் அதிபரும் பாடசாலை அபிவிருத்திச் சங்கத்தின் தலைவியுமான திருமதி விமலாதேவியின் தலைமையில் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் பாராட்டு விழா நடத்தியது.

நெடுந்தீவு கோட்ட பிரதிக் கல்விப்பணிப்பாளர் எஸ். தில்லைநாதன், நெடுந்தீவு உதவி அரசாங்க அதிபர் திரு. சி. அருளப்பு, வைத்திய அதிகாரி வை. யோகேஸ்வரன் மற்றும் எஸ். தருமரத்தினம் உட்படப் பலர் உரையாற்றினார்கள்.

(இ-111)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உதயன்

### கூர்மையுடன் பாருங்கள்!

மாகாண சபைகளுக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்கள் எல்லாம் கடதாசியில் மட்டுமே உள்ளன. சாதாரண தொழிலாளியைக் கூட நியமிக்க முடியாத நிலையில் நாம் இன்று இருக்கின்றோம். மத்திய அரசு மாகாண அரசின் சகல செயற்பாடுகளிலும் தலையிடுகிறது. மாகாண சபையின் பல அதிகாரங்களை மத்திய அரசு தனதாக்கிக் கொண்டுள்ளது.

இது அரசியல்வாதி எவருமோ, பொது மக்களில் எவருமோ அல்லது ஆய்வாளர்கள் எவருமோ தெரிவிக்கும் குற்றச்சாட்டு அல்ல. வடக்கு - கிழக்கு மாகாண சபையின் ஆளுநர் காமினி பொன்சேகா பத்திரிகையாளர் மாநாட்டில் பகிரங்கமாகத் தெரிவித்த தகவல்.

மாகாண சபைகள் சட்டம் கொண்டு வரப்பட்ட போதும், அதன் பின்னரும் மாகாண சபைகளின் வலுவும் சக்தியும் இந்தளவு பலவீனமுடையனவாகவே இருக்கும் என்பதனை இப்பத்தியில் மிகப் பல தடவைகள் எழுதியிருந்தோம்.

மாகாண சபை என்பது பட்டுத் துணியால் அலங்கரிக்கப்பட்ட முருக்கம் செத்தல் என்றும், அதற்குரிய அதிகாரங்களைப் பொறுத்தளவில் நாணயக் கயிறு மத்திய அரசிடமே உண்டு என்பதனையும் அப்போது மிக அழுத்திக் கூறியிருந்தோம்.

அதனையே, வடக்கு-கிழக்கு மாகாண சபையின் ஆளுநராகச் சுமார் இரண்டு வருடங்கள் பணியாற்றிய அனுபவத்தைக் கொண்டு, காமினி பொன்சேகா வெளிக்கொணர்ந்துள்ளார். உண்மை நிலையை பகிரங்கமாக வெளியிட்ட அவரின் துணிச்சல் பாராட்டத் தக்கது.

மாகாண சபைக்குள்ள அதிகாரங்கள் போதியவை அல்ல; வழங்கப்பட்டிருக்கும் அதிகாரங்களிலும் மத்திய அரசு தலையிடுகிறது என்று மேல் மாகாணசபை முதல்வராக இருந்த காலத்தில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா குரல் கொடுத்ததை மறந்துவிடுவதற்கில்லை. எனினும் நிலைமை இன்னும் மாற்றப்படவில்லை; முன்னேற்றம் எதுவும் இல்லை.

அரசாங்கம் புதிதாகக் கொண்டுவருவதற்கு உத்தேசித்துள்ள பிராந்திய சபைகளும் மாகாண சபைகளின் மறுவடிவங்களாகத்தான் இருக்குமா? இது விடயத்தில் தமிழர்கள் மிகவும் விழிப்புடனிருக்க வேண்டும்.

பிராந்திய சபைகள் குறித்த விவரங்கள், விளக்கங்கள் இன்னும் தமிழ் மக்களை வந்தடையவில்லை. அதில் அரச தரப்பில் பெரிதாக அக்கறையும் காட்டப்பட்டதாக இல்லை. அதன் இறுதி வடிவம் எப்படி இருக்கப் போகிறது என்பது இனனும் எவருக்குமே தெரியாது.

தன்னாட்சியை, தலையீடு இல்லாத நிர்வாக அதிகாரத்தை விழைந்து நிற்கும் தமிழர்கள் மீது மாகாண சபை அதிகாரங்கள் வெறும் மேனி மினுக்கல் தந்திரங்களுடன் திணிக்கப்படுவதற்கு இடங்கொடாமல் பார்த்துக் கொள்வது அவசியம். பலமுறை ஏமாந்தவர்கள் எனபதால் இம்முறையும் ஏமாறலாம் என்பதல்ல. கண்களைக் கூர்மையாக்குங்கள்; மனங்களையும் அகல விரித்துக் கொண்டிருங்கள், தமிழர்களே!

# குடாக்கடல் ஊடாக குருநகர் வர பள்ளிக்குடாவில் பலர் முண்டியடிப்பு

## நூற்றுக்கணக்கான குடும்பங்கள் அங்கு தவம்

குருநகர், மே 13

வன்னிப் பகுதியில் பெரும் எடுப்பிலான படை நடவடிக்கை ஒன்றை மேற்கொள்ள ஸ்ரீலங்கா படையினர் தயாராகி வருவதை அடுத்து —

வன்னியிற் பல பகுதிகளிலும் தங்கியுள்ள இடம் பெயர்ந்த குடும்பங்கள் குடாக்கடல் ஊடாக யாழ்ப்பாணம் வருவதற்கு முண்டியடித்து வருவதாக அங்கிருந்து தகவல்கள் கிடைத்துள்ளன.

குடாக்கடல் ஊடாக குருநகரை வந்தடைவதற்காக படகுகளில் இடம் பிடிக்க பல நூற்றுக்கணக்கான குடும்பங்கள் பள்ளிக்குடா கரையில் காத்து நிற்பதாக அங்கிருந்து வந்த பயணிகள் தெரிவித்தனர்.

வன்னியில் பல பகுதிகளில் இருந்து மேலும் மக்கள் அங்கு வந்து குவிவதாகவும் —

போதிய படகுகள் இல்லாததால் வாரக் கணக்கில் அவர்கள் அங்கு தங்கி நிற்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

அங்கிருந்து குருநகர் வருவதற்கான கட்டணத்தை வள்ளங்களின் உரிமையாளர்கள் அதிகரித்துள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

18 வயதுக்கு மேற்பட்டோர் தலா ஆயிரத்து 200 ரூபாவையும் அதற்கு உட்பட்டோர் தலா 600 ரூபாவையும் செலுத்த வேண்டியிருப்பதாகப் பயணிகள் தெரிவித்தனர்.

**329 பேர் நேற்று வருகை**

இதே வேளை —

128 குடும்பங்களைச் சேர்ந்த 329 பேர் நேற்று குருநகர் இறங்கு துறையை வந்தடைந்தனர். பெரிய இயந்திரப்படகு ஒன்றும் 8 வள்ளங்களும் இவர்களை ஏற்றிவந்தன. (ஐ-51)

# வவுனியாவுக்கு அனுப்பப்பட்ட 243 பொலீஸார் தலைமறைவு

கொழும்பு, மே 13

இராணுவத்துக்குத் துணையாக மட்டக்களப்பு, அம்பாறையில் இருந்து வவுனியாவுக்கு அனுப்பப்பட்ட 243 பொலீஸார் வவுனியாவிலிருந்து தலைமறைவாகி விட்டனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவர்கள் வவுனியாவுக்கு பலவந்தமாகவே அழைத்து வரப்பட்டனர் எனவும்—

விடுதலைப் புலிகளின் தாக்குதலுக்கு அஞ்சியே இவர்கள் தலைமறைவாகியுள்ளனர் எனவும் வெளிநாட்டுச் செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்தது.

இந்தப் பொலீஸார் எங்கு சென்றார்கள் என்பது பற்றி எவ்வித தகவலும் இல்லாத நிலையில் அவர்கள் அனைவரும் கூட்டாக பணி நீக்கம் செய்யப்பட்டுள்ளனர் என அரச தரப்புச் செய்திகள் தெரிவிக்கின்றன.

வவுனியா — மன்னார் வீதியில் அமைந்துள்ள காவலரண்களிலும் பங்கர்களிலும் பணியாற்றுமாறு இவர்களுக்கு உத்தரவிடப்பட்டதாகவும்—

இவர்கள் ஆயுதங்களை அதிகாரிகளிடம் ஒப்படைத்த பின்பே தலைமறைவானதாகவும் கொழும்புப் பத்திரிகை ஒன்று தெரிவித்தது.

வவுனியா — மன்னார் வீதிப் பாதுகாப்பில் இதுவரை ஈடுபடுத்தப்பட்டிருந்த இராணுவத்தினரை வவுனியாவுக்குக் கொண்டு சென்றதாலேயே அவ்வீதியைப் பாதுகாக்கும் பணி பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டது என இராணுவ வட்டாரங்கள் தெரிவித்தன.

(இ-உ-5-10)

## வைத்திய நிபுணர் வருகை

யாழ்ப்பாணம், மே 13

யாழ். போதனா வைத்தியசாலையில் குழந்தைகள் சிகிச்சைப் பிரிவில் பணியாற்றுவதற்காகக் குழந்தை வைத்திய நிபுணர் டாக்டர் செல்வி கலா சோமசுந்தரம் கொழும்பில் இருந்து இங்கு வருகை தந்துள்ளார்.

கொழும்பு றிச்வே வைத்தியசாலையில் பணியாற்றிய இவர் எதிர்வரும் ஓகஸ்ட் மாதம் வரை இங்கு கடமை ஆற்றுவார் எனத் தெரிவிக்கப்பட்டது. (ஐ-15)

## நூல் வெளியீடு

யாழ்ப்பாணம், மே 13

சித்தமருத்துவ கலாநிதி சே. சிவசண்முகராஜா எழுதிய 'சுதேச மருத்துவ மூலிகை கையகராதி' நூல் வெளியீட்டு விழா எதிர்வரும் வெள்ளிக்கிழமை பிற்பகல் 1.00 மணிக்குக் கைதடி சித்த போதனா வைத்தியசாலையில் சித்தமருத்துவ கலாநிதி ஐ. ஜெபநாமகணேசன் தலைமையில் நடைபெறும்.

பிரதம விருந்தினராக யாழ். மாநகரசபை ஆணையாளர் வே. பொ. பாலசிங்கமும், சிறப்பு விருந்தினராக யாழ். பல்கலைக்கழக கலைப் பீடாதிபதி பேராசிரியர் அ. சண்முகதாஸும் கலந்து கொளவர்.

யாழ் பல்கலைக்கழக சித்த மருத்துவத்துறைத் தலைவர் சித்தமருத்துவ கலாநிதி (திருமதி) மி. ஸ்ரீகாந்தன், தென்மராட்சி பரதேச செயலாளர் பு. சுந்தரம்பிள்ளை, சித்த போதனா வைத்தியசாலை மருத்துவ உத்தியோகத்தர் சித்தமருத்துவ கலாநிதி (திருமதி) வி. கைலாசபதி ஆகியோர் வாழ்த்துரை வழங்குவர்.

சித்த மருத்துவத் துறையின் சிரேஷ்ட விரிவுரையாளர் சித்த மருத்துவ கலாநிதி சு பவானி, சுதேச வைத்திய அபிவிருத்திச் சங்கத் தலைவர் சித்த மருத்துவ கலாநிதி சோ. சபாநாதன் ஆகியோர் சிறப்புரை நிகழ்த்துவர். (உ)

# விடுவிக்கப்பட்டோரின் சைக்கிள் ஒப்படைப்பு

## உரியவர் ஆதாரம் காட்டிப் பெறலாம்

யாழ்ப்பாணம், மே 13

குடாநாட்டில் பல்வேறு சந்தர்ப்பங்களில் படையினரால் கைது செய்யப்பட்டோரில் அண்மையில் விடுவிக்கப்பட்ட 27 பேரின் சைக்கிள்கள் யாழ் பொலீஸ் நிலையத்தில் வைத்து நாளை மறுதினம் வியாழக்கிழமை உரியவர்களிடம் கையளிக்கப்பட உள்ளன.

விடுதலையானோர் அல்லது அவர்களது நெருங்கிய உறவினர்கள் உரிய ஆதாரம் காட்டி அவற்றைப் பெற்றுக் கொள்ளுமாறு யாழ். ஈ. பி. டி. பி. அலுவலகத்தினர் அறிவித்துள்ளனர்.

சம்பந்தப்பட்ட 27 பேரின் பெயர் விவரங்கள் வருமாறு:-

★ இராமையா அசோக் குமார்—அளவெட்டி.
★ இராசநாயகம் நிமலன்—மட்டுவில் தெற்கு.
★ அன்ரனி ஜீவராஜா—குருநகர்.
★ பிள்ளையார் அன்ரனி—குருநகர்.
★ ஸ்ரீரங்கநாதன் ஸ்ரீகாந்தன்—சண்டிலிப்பாய்.
★ அன்ரன் கலிஸ்ரஸ்—பண்டத்தரிப்பு.
★ முத்தையா ரவிச்சந்திரன்—சாவகச்சேரி.
★ கிருஷ்ணமூர்த்தி சுதாகரன்—சங்கானை.
★ லிங்கம் மாணிக்கம்—நவாலி வடக்கு.
★ சிவாஜி ராஜ்[illegible]—மானிப்பாய்.
★ ராஜரட்ணம் கோபாலரட்ணம்—கொக்குவில் மேற்கு.
★ ராஜரட்ணம் ருவதீஸ்வரன்—மந்துவில் கிழக்கு, கொடிகாமம்.
★ யோகானந்தன் மோகனதாஸ்—மானிப்பாய்.
★ கந்தையா ஸ்ரீதரன்—கோண்டாவில்.
★ மாணிக்கம் நவநீதன்—புத்தூர்.
★ வேலுப்பிள்ளை மயில்வாகன்—நாகர்கோயில்.
★ குமாரசுவாமி ராஜசிங்கம்—ஆனைக்கோட்டை.
★ ரத்தினம் நவரத்தினம்—மானிப்பாய்.
★ முத்துத்தம்பி சபாஸ்கந்தன் — வண்ணார்பண்ணை மேற்கு.
★ நடேசன் தியாகராஜா—பண்டத்தரிப்பு.
★ பாலமுரளி ஜெயவாணி—மானிப்பாய்.
★ இராஜேந்திரம் இராஜேஸ்வரன்—கலட்டி, யாழ்ப்பாணம்.
★ பொன்னுசாமி சந்திரா—ஆனைக்கோட்டை.
★ பிள்ளை நடராசா மோகனராஜ்—மானிப்பாய்.
★ இராமசாமி பாக்கியராஜ் — ஆறுகால்மடம், ஆனைக்கோட்டை.
★ யோகராசா யோகராணி—சங்கானை.
★ [illegible]—பருத்தித்[illegible].

(உ-ஐ)

## கொடிகாமம் வீதி திருத்தப்படும்

பருத்தித்துறை - கொடிகாமம் வீதி திருத்தப்படவுள்ளது. வடமராட்சிக்கான பிரதான மார்க்கமாக உள்ள பாதைகளில் ஒன்றான இந்த வீதியை முன்னுரிமை கொடுத்துச் செப்பனிட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. (ஐ-173)

**நாளை**

**சித்திரை 31**

புதன்கிழமை

திதி: அட்டமி முழுநாளும்

நட்சத்திரம்: ஆயிலியம் மாலை 5.58 வரை.

மரணயோகம்

சுபநேரம்: 4. 23 - 5. 53

ராகுகாலம்: 11.53-1.23

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

## விபத்தில் காயம்

யாழ்ப்பாணம், மே 13

பருத்தித்துறை, கற்கோவளம் பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் விபத்தில் நவரட்ணம் நேசகுமார் (வயது 16) என்ற இளைஞன் படுகாயமடைந்தார்.

பந்து விளையாடிக் கொண்டிருந்த பிரஸ்தாப இளைஞர் வெளியே சென்ற பந்தை எடுத்துவருவதற்காக வீதியின் குறுக்கே ஓடிய வேளையே விபத்து ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

படுகாயமடைந்தவர் மந்திகை ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். ஆஸ்பத்திரிக்கு மாற்றப்பட்டுள்ளார். (ஐ-15)

## மீன் விலை குறைகிறது

யாழ்ப்பாணம், மே 13

யாழ்ப்பாணப் பகுதியில் தற்போது மீனின் விலை ஓரளவு குறைந்துள்ளது.

யாழ். கடலேரியில் பகல் வேளையிலும் மீன்பிடிக்க அனுமதிக்கப் பட்டிருப்பதை அடுத்தே மீனின் விலையில் வீழ்ச்சி காணப்படுகிறது. (ஐ-15-173)

## தினக்குறிப்பேடு

யாழ் செயலகத்துக்கு வந்து சேர்ந்த கிராம உத்தியோகத்தர்களின் 1997 ஆம் ஆண்டுக்குரிய தினக்குறிப்பேடுகள் ஒவ்வொரு பிரதேச செயலகங்களுக்கும் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

## பாடசாலைக்கு புதிய கட்டடம்

யாழ்ப்பாணம், மே. 13

குருநகர் சென் ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தில் முன்னாள் அதிபர் றோமானின் ஞாபகார்த்தமாக புதிய கட்டடம் ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

இக்கட்டடத்தை யாழ். பல்கலைக்கழக பதிவாளர் கலாநிதி க. குணராசா அண்மையில் திறந்துவைத்தார். வித்தியாலய அதிபர் தங்கராசா தலைமையில் இவ்வைபவம் நடைபெற்றது. (ஐ-173)

## பருத்தித்துறையில் புதிய கப்பல்

வடமராட்சி, மே 13

தனியார் வர்த்தகர்களுக்கான ஒரு தொகுதி பொருள்களுடன் கொரியா நாட்டுக் கப்பலான பொஹான்லொங் என்ற கப்பல் நேற்று முன்தினம் பருத்தித்துறை துறைமுகத்தை வந்தடைந்தது. அங்கு உடனடியாக பொருள்கள் இறக்கும் பணி ஆரம்பமானது.

சரக்குக் கப்பல்கள் ஏதும் கடந்த வாரம் பருத்தித்துறை துறைமுகத்துக்கு வராமையினால் கடந்த 6 தினங்களாக இங்கு பொருள்கள் இறக்கும் பணி ஏதும் நடைபெறவில்லை. (ஐ-15-173)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# வவுனியா நகரில் நேற்று முழக்கம்!

வவுனியா, மே 13

வவுனியாவிலிருந்து எந்த நேரத்திலும் இராணுவ நடவடிக்கை ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்பட்டிருக்கும் இவ்வேளையில் — நேற்றுப் பிற்பகல் — வவுனியா நகரம் முழக்கங்களால் அதிர்ந்தது.

ஷெல் முழக்கங்களால் அல்ல; இடி முழக்கங்களால்!

யுத்த மேகங்கள் சூழ்ந்திருக்கும் வவுனியா நகரை நேற்றுக் காலை முதல் கருமேகங்கள் சூழ்ந்திருந்தன. காலை முதல் பிற்பகல் வரை மழை பெய்து கொண்டிருந்தது.

யுத்தம் வலுக்கும் என எதிர்பார்க்கப்பட்ட வேளை நேற்று மாலை மழை வலுத்தது; பெருங்காற்றுடன் கடும் மழை கொட்டியது; மின்னலுடன் இடி விடாது முழங்கியது.

கொட்டும் மழைக்கும் மத்தியிலும் படையினரின் ஐம்பதுக்கும் அதிகமான வாகனங்கள வவுனியா பெற்றோல் நிலையங்களில் நேற்று டீஸல், பெற்றோல் நிரப்பிக் கொண்டிருந்ததைக் காணமுடிந்தது

படை நடவடிக்கைக்கு முன்னேற்பாடாக —

வவுனியா நகரப் பகுதியில் இருக்கும் காவலரண்களில் மக்களைச் சோதனையிடும் வேலை நேற்று முற்றும் முழுதாகப் பொலீஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது.

படையினருக்கு வழங்குவதற்காக — பதப்படுத்தப்பட்டு பக்கெட்டுக்களில் அடைக்கப்பட்ட — உணவுப் பொதிகள் பல்லாயிரக்கணக்கில் வவுனியாவுக்கு எடுத்து வரப்பட்டுள்ளன. இந்த பக்கெட்டுகள் அடங்கிய பொதிகளை ஏற்றி வரும் வேலையில் படையினரின் பல வாகனங்கள் நேற்று ஈடுபட்டிருந்தன. (உ)

## வன்னி படை நடவடிக்கை குறித்து அதிகாரிகளிடையே முரண்பாடு

கொழும்பு, மே 13

வவுனியாவில் இருந்து மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ள இராணுவ நடவடிக்கை குறித்து இராணுவ உயரதிகாரிகளிடையேபலத்த கருத்து மோதல்களும் முரண்பாடு களும் நிலவி வருவதாக செய்தி நிறுவனம் ஒன்று தெரிவித்துள்ளது.

அரச படைகள் எந்தெந்த மார்க்கங்கள் ஊடாக முன்னேறலாம் என்பதைத் துல்லியமாக ஆராய்ந்து விடுதலைப் புலிகள் தங்கள் அணிகளைப் பல பிரிவுகளாகப் பிரித்து பயிற்சிகள் வழங்கி தக்க தயார் நிலையில் நிறுத்தியுள்ளனர் எனவும் —

அரச படைகள் கடந்த காலங்களை விட மிகப்பெரிய அழிவுகளை வவுனியாச் சமரில் சந்திக்கும் என பொது மக்கள் கருதுவதாகவும் —

தனது வவுனியாச் செய்தியாளரை மேற்கோள்காட்டி அந்தச் செய்தி நிறுவனம் குறிப்பிட்டது. (உ-10)

## சேமிப்புக் கடன் திட்டம்

யாழ்ப்பாணம், மே 13

மக்கள் வங்கியினால் நடைமுறைப்படுத்தப்படும் ''குருசெத'' என்னும் ஆசிரியர்களுக்கான சேமிப்புக் கடன் வழங்கும் திட்டம் யாழ். மாவட்டத்தில் யாழ். மத்திய கல்லூரியில் முதன் முதலாக ஆரம்பித்து வைக்கப்பட்டுள்ளது.

காங்கேசன்துறை மக்கள் வங்கிக்கிளையில் வழிகாட்டலில் ஆரம்பிக்கப்பட்ட இச்சேமிப்புக் கடன் திட்டத்துக்கான அமைப்பின் நிர்வாகக் குழு அதிபர் க. இராசதுரை தலைமையில் தெரிவு செய்யப்பட்டது. (ஐ-173)

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம்: 29 — 03 — 1935

மறைவு: 24 — 04 — 1996

### அமரர் வேலுப்பிள்ளை வீரவாகு

(ஓய்வு பெற்ற உதவி முகாமையாளர், இலங்கை வங்கி)

**திதி: 13 - 05 - 1997**

வையகத்தில் நாம் இனிதாய் வாழ்வதற்காய்
ஓயாமல்
செய்கருமம் அத்தனையும் சீராகச் செய்து
வந்த அப்பாவே!
கல்வியே வாழ்க்கையின் கலங்கரைவிளக்கென்று
கற்றவர் மத்தியில் தலை நிமிர்ந்து
வாழவைத்த தெய்வமே!
தீராத நோயோடு போராடிச் சென்றீர்கள் —
ஐயா!
தீராது எம் கவலை.

பிரிவால் துயருறும்
மனைவி, பிள்ளைகள்.

கோயில் கடவை,
துன்னாலை மத்தி,
கரவெட்டி.

(46804)

## மன்னாரில் பேரணி

மன்னாரில் இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத பெருநிலப்பரப்பில் வாழும் மக்களுக்கான உணவு விநியோகத்துக்கு விதிக்கப்பட்டுள்ள கட்டுப்பாடுகள் மற்றும் கெடுபிடிகளுக்கு ஆட்சேபம் தெரிவித்தும் அவற்றை உடனடியாக நீக்கக் கோரியும் அப்பகுதி மக்கள் நேற்றுப் பேரணி ஒன்றை நடத்தினர்.

மடுத் தேவாலயத்திலும், பாலம்பட்டிப் பகுதியிலும் தங்கியுள்ள பல நூற்றுக் கணக்கான மக்கள் இந்தப் பேரணியில் கலந்துகொண்டனர்.

இராணுவக் கட்டுப்பாட்டில் இல்லாத மன்னார் பெருநிலப்பரப்பைச் சேர்ந்த பகுதிகளில் வாழும் மக்கள் தமக்குத் தேவையான உணவு மற்றும் அத்தியாவசியப் பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக உயிலங்குளத்திலும், மடு றோட்டிலும் இரண்டு நிலையங்கள் படையினரின் ஏற்பாட்டில் கடந்த செவ்வாயன்று திறந்து வைக்கப்பட்டுள்ளன.

இந்த இரு நிலையங்களின் மூலம் மட்டுமே இப்பகுதி மக்கள் தமக்குத் தேவையான பொருள்களைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்கப்பட்டுள்ளனர்.

இந்த இரு நிலையங்களிலும் இருந்து பொருள்களைப் பெறுவதாயின் 9 முதல் 40 மைல் தூரம் அலைந்து பயணம் செய்து பெரும் சிரமங்களை அனுபவிக்கவேண்டி இருப்பதாக இப்பகுதி வாழ் மக்கள் முறையிட்டுள்ளனர்.

நேற்று நடைபெற்ற பேரணியின் முடிவில் இந்த உணவு விநியோக நடைமுறையை ஆட்சேபித்து மன்னார் மாவட்ட அரச அதிபரிடமும், அகதிகளுக்கான ஐ. நா. தூதரகப் பிரதிநிதிகளிடமும் மகஜர்கள் கையளிக்கப்பட்டன.

இதேவேளை —

திறக்கப்பட்டுள்ள உணவு விநியோக நிலையத்துக்கு வந்து நேற்று 20 குடும்பங்கள் மட்டுமே உணவுப் பொருள்களைப் பெற்றுக் கொண்டதாக மன்னார் செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

## பெருமளவு ..

(முதலாம் பக்கத் தொடர்)

விவரத் திரட்டுக் கூட—விடுதலைப் புலிகளால் தீயிட்டுஎரிக்கப்பட்டு விட்டதால் பொலீஸ் நிலையத்தில் அச்சமயம் இருந்த ஆயுதங்களின் சரியான விவரங்களை உடனடியாகப் பெற முடியவில்லை என செய்தி ஏஜென்ஸி ஒன்று குறிப்பிட்டது. (உ-21)

## சாள்ஸ்...

(முதலாம் பக்கத் தொடர்)

இயங்கும்— ஜீவன், சுவர்ணன் ஆகியோர் தலைமையிலான— அணியே இத்தாக்குதலை நடத்தியிருப்பதாக தாக்குதல் நடத்திய பிரதேசத்தில் விடுதலைப் புலிகள் விட்டுச் சென்ற துண்டுப் பிரசுரங்களிலிருந்து தெரிய வந்தது என செய்தி ஏஜென்ஸி ஒன்று குறிப்பிட்டது. (உ-21-10)

## வவுனியாவில்...

(முதலாம் பக்கத் தொடர்)

வட பகுதியில் இருந்து வரும் அகதிகளைத் தங்க வைப்பதற்காக அண்மையில் சுமார் ஆறு மாத காலங்கள் வரை வவுனியாவிலுள்ள முக்கிய பாடசாலைகள் மூடப்பட்டிருந்தன.

தற்போது படையினரைத் தங்க வைப்பதற்காக மூடப்பட்டுள்ள பாடசாலைகளை உடனடியாகத் திறக்கும்படி கோரி சம்பந்தப்பட்டவர்களுக்கு மகஜர்கள் அனுப்பப்பட்டுள்ளன எனவும் தமது கோரிக்கை நிறைவேற்றப்படாவிடின் ஆர்ப்பாட்டப் பேரணி நடத்த பெற்றோர்கள் திட்டமிட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

## காணாமற்போனோரின்...

(முதலாம் பக்கத் தொடர்)

அவர்கள் நேற்றுக் காலை கூட்டமாக யாழ் செயலகத்துக்குச் சென்று யாழ் மேலதிக அரச அதிபர் க. சண்முகநாதனிடம் தமது எச்சரிக்கையை நேரிலும் எழுது மூலமாகவும் தெரிவித்தனர்.

மேற்படி அமைப்புக்களைச் சேர்ந்த சுமார் ஐந்நூறு பேர் நேற்றுக் காலை 11 மணியளவில் யாழ். செயலகம் முன்பாகக் கூடினர்.

பின்னர் வரிசை வரிசையாக அவர்கள் யாழ், மேலதிக அரச அதிபர் அலுவலகத்தை நோக்கிச் சென்று யாழ். செயலக மண்டபத்தில் கூடினர்.

அங்கு நடந்த கலந்துரையாடலில் கைதானோர் காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கத் தலைவர் வி. செல்வராசா உரையாற்றினார். இந்த அமைப்பின் உதவிச்செயலாளர் விஜயகுமார், அன்னையர் முன்னணிச் செயலாளர் திருமதி சி. சிவாஜினி உட்பட மேலும்பலரும் அங்கு உரையாற்றினர்.

தமது கணவனை — உடன் பிறப்புக்களை தமது பிள்ளைகளை இழந்து தவிக்கும் அவலங்களை அங்கு பேசியவர்கள் அழுது அழுது எடுத்துக் கூறித் தமக்குப் பரிகாரம் பெற்றுத்தருமாறு கேட்டனர்.

''எமது உடன் பிறப்புக்களை உடனே விடுதலை செய்யுங்கள் என்று நாம் கோர வில்லை. ஆகக் குறைந்தது அவர்கள் இருக்கும் இடத்தையாவது தெரிவியுங்கள் என்றுதான் நாம் கேட்கிறோம். அவர்களுடன் நாம் தொடர்பு கொள்ள வகை செய்யுங்கள் என்றுதான் கோருகின்றோம்.'' — என்று அவர்கள் கோரினார்கள்.

பாதுகாப்பு அமைச்சு நியமித்த குழு இரு தடவைகள் யாழ்ப்பாணம் வந்து விசாரணை நடத்தியும், எந்த வித பலனும் கிடைக்க வில்லையே என்றுஅவர்கள் அங்கு அதிருப்தி வெளியிட்டனர்.

''எமது உடன் பிறப்புக்கள் இருக்கும் இடத்தை ஒரு வார காலத்துக்குள் அறிந்து எமக்கு அறிவியுங்கள். இல்லையேல் நாம் சாகும் வரையான உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பிக்கப்போகின்றோம்.'' — என்று அங்கு குழுமியிருந்த அன்னையர்களும், ஆண்களும் உரத்த குரலில் அழுதவாறு மேலதிக அரச அதிபரிடம் கூறினர்.

காணாமற்போனோர் குறித்து இங்கு வந்து விசாரணை நடத்துவதற்கு இளைப்பாறிய நீதியரசர் ஒருவர் தலைமையில் சுயாதீனக் குழு ஒன்றை அமைக்குமாறு ஜனாதிபதியிடம் தெரிவியுங்கள் என்று அவர்கள் மேலதிக அரச அதிபரிடம் கோரினார்கள்.

அவர்கள் சார்பில் தம்மிடம் கையளிக்கப்பட்ட மகஜர்களைப் பெற்றுக் கொண்டு பதில் அளித்த மேலதிக அரச அதிபர் அங்கு கூறியதாவது:-

''காணாமற் போனவர்கள் தொடர்பாக பாதுகாப்பு அமைச்சுக்கும், பலாலி இராணுவ அதிகாரிகளுக்கும் தகவல் கொடுத்துள்ளோம். உங்கள் நிலை குறித்து அரசுக்கு நாம் தெரிவித்துக் கொண்டிருக்கிறோம்.

''தற்சமயம் கொழும்பில் தங்கியுள்ள யாழ். அரச அதிபருக்கு உங்கள் கோரிக்கையை உடன் அனுப்பி நாளை கொழும்பில் நடக்கும் உயர்மட்ட மாநாட்டில் இது பற்றிக் பேசுமாறு அரச அதிபரைப் கோருவேன்''. — என்றார்.

இந்தச் சந்திப்பின் முடிவில் அங்கு குழுமியிருந்த பெண்களும், ஆண்களும் உரத்த குரலில் ''எமது பிள்ளைகளுடன் தொடர்பைஏற்படுத்தித் தாருங்கள்!'', ''நீதியின் முன் அவர்களை நிறுத்துங்கள்'' ''அவர்கள் பற்றிய விவரங்களை வெளியிடுங்கள்'' — என்று கோஷமிட்டனர். (உ-3-5)

## மொறவெவ பொலீஸ்...

(முதலாம் பக்கத் தொடர்)

மோட்டார் சைக்கிள்கள் உட்பட வாகனங்கள் அனைத்தும் புலிகளால் தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளன.

இத் தாக்குதல் நடத்தப்பட்ட அதே சமயம், பொலீஸ் நிலையத்துக்கு மேலதிக அவசர உதவிகள் கிடைப்பதைத் தடுப்பதற்காக —அருகிலிருந்த—பன்குளம் விமானப் படைத் தளத்தின் மீதும். வேறு ஒரு பக்கத்திலிருந்த இராணுவக் காவலரண்கள் மீதும் ஏக காலத்தில் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

விமானப் படை விடுதிப் பகுதியில் விழுந்த ஷெல்களினால் மூன்று விமானப்படையினரும் அங்கிருந்த பொது மக்கள் இருவரும் காயமுற்றனர்.

இத்தாக்குதலில் கொல்லப்பட்ட பொலீஸாரைத் தவிர —எஞ்சிய சுமார் அறுபது பொலீஸாரில் பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி உட்பட 13 பேர் காயமடைந்தனர். அவர்களைத் தவிர, அப்பகுதியிலிருந்து மூன்று ஊர்காவலர் மற்றும் ஐந்து பொதுமக்களும் கூட காயமுற்றனர்.

பொலீஸாரின் விடுதி மீது விழுந்த ஷெல்லினால் அங்கிருந்த பொலீஸ் கான்ஸ்டபிள் ஒருவரின் மனைவி விடுதிக்குள்ளேயே உயிரிழந்தார்.

திடீர் தாக்குதலினால் அவலப்பட்டு தனது இரண்டு பிள்ளைகளுடன் ஓடிச்சென்று அருகிலிருந்த பங்கர் ஒன்றுக்குள் ஒளித்த பொலீஸ்காரர் ஒருவரின் மனைவி பங்கருக்குள் விழுந்த மோட்டார் ஷெல்லினால் அதற்குள்ளேயே தனது இரு பிள்ளைகளுடன் உயிரிழந்தார்.

இத்தாக்குதல் சம்பவத்தை அடுத்து நேற்றுக் காலை அங்கு விரைந்து அனுப்பப்பட்ட மேலதிக படையினர், பொலீஸ் நிலையப் பகுதியை மீண்டும் தமது கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

அருகிலிருந்த நாமல்வத்த காட்டுப்பகுதி ஊடாகவே முன்னேறி வந்து இத்தாக்குதலை புலிகள் நடத்தி விட்டு அதே பாதை வழியாகத் தமது தளங்களுக்குத் திரும்பியிருக்கலாம் என நம்பப்படுகிறது.

அதனையடுத்து நாமல்வத்த காட்டுப்பகுதியில் தேடுதல் முடுக்கி விடப்பட்டிருக்கின்றது. அப்பகுதியில் விமானத் தாக்குதல்களும் நேற்று இடம்பெற்றன.

தாக்குதலுக்கு உள்ளான மொறவெவ பகுதி சுற்றிவர சிங்கள கிராமங்களால் சூழப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

மொறவெவ பொலீஸ் நிலையம் பொலீஸாருக்குப் பயிற்சி அளிக்கும் தளமாகவும் இருந்து வந்ததாகக் கூறப்படுகின்றது. அங்கு பொலீஸாருக்கு பயிற்சியளிப்பதற்குப் பொறுப்பாக இருந்த அதிகாரியும் நேற்றைய தாக்குதலில் உயிரிழந்ததாக ஒரு செய்தி தெரிவித்தது.

இந்தப் பொலீஸ் நிலையத்தைச் சுற்றிவளைத்துப் பல மணித்தியாலங்கள் போராளிகள் தாக்குதலை மேற்கொண்டதாகவும் —

அவர்கள் றொக்கட்டுகள், கிரனேட்டுகள் மற்றும் சிறு ஆயுதங்களைத் தாக்குதலுக்குப் பயன்படுத்தியதாகவும்—

செய்தி ஏஜென்சி ஒன்று நேற்றுக் காலை குறிப்பிட்டது.

இத்தாக்குதலில் கொல்லப்பட்டவர்களின் மரண விசாரணைகளை மேற்கொள்வதற்காக திருகோணமலை நீதிவான் ரி. சுவர்ணராஜ் சம்பவம் நடந்த இடத்துக்கு நேற்றுச் சென்றிருந்தார். (உ-3-5-10-150)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி, 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 13-05-1997 இல் அச்சிட்டு வெளியிடப் பெற்றது.

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org